# ஊஞ்சல்

ஜூன், 2011

மாத இதழ்

விலை ₹ 15/-



## ஒரே ஒரு சாட்சி

## பட்டுக்கோட்டை பிரபாகர்



பட்டுக்கோட்டை க.தூயவன் எழுதிய 'எனக்காக ஒரு வானம்' புத்தகத்தில் இருந்து சில பளிச் கவிதைகள்...



பூக்களுக்குச் சிறை...
அரசாங்க அனுமதியோடு
பூங்கா!

அமைதி விரும்பும் எல்லா
நாடுகளும் வைத்திருக்கின்றன...
அணுகுண்டு!

கலர் கலராய்
கரன்சி தரும் கணினி,
இனி தருமா
கைப்பிடிச் சோறு?
பிட்சாவும், பர்கரும்
பயிரிடக் கற்றுக் கொண்டால்
மட்டுமே இனி
விவசாயிக்கு வாழ்வு!

எல்லா ஜாதி இரத்தமும்
ஒரே நிறம்... சிரிக்கிறது
சலூன் கத்தி!

திருக்குறள் இரண்டடி
பிழையாய்ச் சொன்ன
மாணவனுக்கு
நாலு அடி!

மறக்கப்பட்ட மகாத்மா
மறைக்கப்படுகிறார் மாலைகளால்...
காந்தி ஜெயந்தி!

—ரசனைத் தும்பி



# ஒரே ஒரு சாட்சி

## பட்டுக்கோட்டை பிரபாகர்



1

பத்ரிநாத் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான். ஜன்னல் மேலும் கீழும் மெதுவாக அசைந்து கொண்டிருந்தது. ஆடும் நாற்காலியை நிறுத்தினான். ஜனனல் நின்றது. மூடப்பட்ட கண்ணாடிக ளில் நீர்ப் பாம்புகள் இறங்கின. வேர் வேராகக் கிளைவிட்ட மின்னல் ஒன்று மழையை நிச்சயப் படுத்தியது.

காற்றில்லாததால் நேராக நூல் புகை உயர்ந்து மின் விசிறியின் சுழலாத இறக்கைகள் வழியாக விட்டம் தொட்டது. சாம்பலை அருகில் ஆஷ்ட்ரே இருந்தும் தரையில் சுண்டினான். அவ்வாறாக எறும்பின் பார்வையில் தரையெங்கும் நிறைய சாம்பல் குன்றுகள்.

குள்ள மேஜையில் சத்தமில்லாமல் ஆவியாகிக் கொண்டிருந்த ஆரஞ்சு நிற விண்ட்டேஜை எடுத்தான். சோடா எடுத்தவன் திடீரென புறக்கணித்து வெறுமனே கவிழ்த்துக் கொண்டான்.

எழுந்தான். சுவிட்ச் போர்டு நோக்கி நடப்பதுதான் நோக்கம். ஆனால் கால்கள் பாத்ரூம் கதவருகில் கொண்டு வந்து அவனை நிறுத்தின. வந்ததால், வந்ததால் (புரூஃப் பிழை அல்ல) உள்ளே வந்தான். ஜிப்பை இறக்கினான்.

யாவது தொட முடியுமா? பிரபஞ்சத்தில் எது எல்லை? ஆனா எதை நோக்கியாவது சுவாரசியமான நோக்கம் வெச்சிக்கிட்டு போய்க்கிட்டே இருக்கணும். அதான் அர்த்தமுள்ள வாழ்க்கை. அதான் சவால். அதான் த்ரில். சம்பாரிச்சது போதாது பத்ரி. நாம எல்லாம் தூசு. மலை எல்லாம் இருக்கு. நாம மலையாக வேணாம். ஒரு குன்றாகறதுக்காவது முயற்சி பண்ணலாமே."

"எனக்குப் பிடிக்கலை."

"எனக்குப் பிடிக்குதே. முயற்சி பண்றவங்களை ஏன் தடுக்கறீங்க?"

"இந்தப் பேச்சை எடுக்காதே. நீ எப்பக் கேட்டாலும் என் பதில் ஒரு Big No! புரிஞ்சுதா?" எழுந்து சென்று விட்டான் பத்ரிநாத்.

அன்று முதல் கணவனும் மனைவியும் இந்தியாவும் பாகிஸ்தானுமாகி... எப்போதும் ஒரு உரசல்! ஒரு இடி! ஒரு குத்தல்! ஒரு நெருடல்! அதனால் வாழ்க்கையின் வசீகரம் டல்! ஆகவே வெளியே பாரில் நண்பர்களோடு மட்டும் எப்போதாவது வியன்னா இஸ்ஸன்னா கியன்னா சாப்பிடுபவன் இப்போதெல்லாம் அடிக்கடி... வீட்டுக்குள்ளேயே... தனியாகவே...

"ஓ காட்! நேத்துத்தானே அவ்வளவு தூரம் அட்வைஸ் பண்ணேன். மறுபடி வீட்டுக்குள்ளேயே குடிக்க ஆரம்பிச்சிட்டீங்களா?" என்றாள் எழிலரசி.

சிட்-அவுட்டின் கதவுகளை இழுத்துத் தாளிட்டு விட்டு வந்தான். ஒரு தடுமாற்றத்திற்குப் பின் அங்கே அவள் இல்லை போல இயல்பாக சோபாவில் சாய்ந்து ஒரு சிகரெட் எடுத்து உதட்டில் வைத்து லைட்டர் தேடினான்.

அவள் அருகில் வந்து அந்த சிகரெட்டை உருவி ஒடித்துப் போட்டாள்- ஆத்திரத்தில் அங்கமெல்லாம் அதிர! சிகரெட் பாக்கெட்டையும் கைப்பற்றினாள்.

அவனுக்கு சரக்கென்று நெருப்புப் பற்றியது போல் கோபம் ஏறியது.

"ஏய்! லுக்! மரியாதையா ஒரு சிகரெட் எடுத்து என் உதட்ல வச்சி பத்த வச்சி விடணும் நீ. இல்லைன்னா வெறியாய்டுவேன்."

அவ்வளவு உச்சமாக அவன் கத்தி அவள் கேட்டதே இல்லை. கைகள் நடுங்க, மறு பேச்சில்லாமல் ஒரு சிகரெட்டை அவன் உதடுகளில் வைத்து பற்ற வைத்தாள் எழிலரசி.

"உக்காரு! இப்படி உக்காரு!" தன்னருகில் இருந்த நாற்காலியைக் காட்டினான். அமர்ந்தாள்.

"குடிக்காதேன்னு சொல்றியே ஒழிய, ஏன் குடிக்கிறேன்னு கேட்டிருக்கியா நீ?"

அமைதியாய் இருந்தாள்.



"இப்ப கேளு! கேளுடி!" அதட்டினான்.

"ஏன் இப்படி குடிக்கறீங்க?"

"உன்னை நினைச்சுதான் குடிக்கிறேன்."

"நானா? நான் என்ன செஞ்சேன்?"

"மாறிட்டே! ரொம்ப மாறிட்டே!"

"என்ன மாறிட்டேன்?"

"என்னைக் காதலிச்சி கல்யாணம் செய்துகிட்ட அந்த எழிலரசியைக் காணோம். இது வேற பொண்ணு. அவ இல்லை. அவ தொலைஞ்சி போய்ட்டா. மிஸ்ஸிங்!"

"போதையில எதையாச்சும் உளறாம பேசாம படுங்க. காலைல பேசிக்கலாம்."

"இல்லை. இப்பவே பேசிடலாம். நான் போதையிலதான் இருக்கேன். ஆனா தெளிவா இருக்கேன். சொல்லு..."

"என்ன சொல்லணும்?"

"ஏன் இப்படி மாறினே?"

"நான் ஒண்ணும் மாறலை..."

"இல்லை. மாறிட்டே. அந்த மணிசங்கர் நம்ம ரெண்டு பேருக்கும் நடுவே புகுந்து உன் மனசை மாத்திட்டான். ஹி ஈஸ் எ வில்லன்!"

"பேத்தாதீங்க. ஹி ஈஸ் எ ஜெம்! எவ்வளவு உலக அறிவும், புத்திசாலித்தனமும் அவருக்கு இருக்கு தெரியுமா?"

"அதனால உன்னை மடக்கிப் போட்டுட்டான்."

"வாட் நான்சென்ஸ்?"

"நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து ஆரம்பிக்கிற நிறுவனத்துக்கு அக்ரிமெண்ட் போட்ருக்கீங்க நேத்து. உண்டா, இல்லையா?"

அமைதியானாள்.

"ஹிந்து பேப்பர்ல ஆபீஸ் வாடகைக்கு தேவைன்னு கிளாசிஃபைட் செக்‌ஷன்ல விளம்பரம் எழுதிக் கொடுத்துட்டு வந்திருக்கீங்க. உண்டா, இல்லையா?"

கைகளைப் பிசைந்தாள்.

"பேங்க் மேனேஜரைப் பார்த்து லோன் போடறது சம்பந்தமா பேசி அப்ளிகேஷன் ஃபாரம் எல்லாம் வாங்கிட்டு வந்திருக்கீங்க. உண்டா, இல்லையா?"

அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு தலை குனிந்தாள்.

"பதில் சொல்லுடி. நான் சொல்றதெல்லாம் நிஜம்தானே?"

"ஆமாம்" என்றாள்.

"என்னோட சம்மதம் வேணாமா உனக்கு?"

"நீங்க சம்மதிப்பீங்கன்ற நம்பிக்கையிலதான் அடிப்படையான வேலைகளைத் துவக்கியிருக்கோம்."

"எனக்குத்தான் சம்மதம் இல்லைன்னு நூறு தடவை சொல்லிட்டேனே..."

"நூறு தடவையும் உருப்படியான காரணம் எதுவும் சொல்லலை. நான் சொல்லட்டுமா உண்மையான காரணத்தை?

உங்க மனசுல என்ன இருக்குன்னு அப்பட்டமா நான் சொல்லட்டுமா?"

"சொல்லு..."

"இந்த மாதிரி புது பிசினெஸ் ஆரம்பிச்சா எனக்கு எக்கச்சக்கமா வருமானம் வரும். பேர், புகழ், மரியாதை எல்லாம் வளரும். உங்களுக்கு உள்ளுக்குள்ளே பொறாமை! காம்ப்ளெக்ஸ்! தன்னைவிட தன் மனைவி உயர்ந்துடக் கூடாதேன்னு அல்பத்தனமான சிந்தனை! இதனாலதான் என்னோட நல்ல முயற்சிக்கு முட்டுக்கட்டை போடறீங்க!"

பத்ரிநாத் வாய் விட்டுச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீங்க?"

"உன் புருஷனை நீ புரிஞ்சிக்கிட்டது அவ்வளவுதான்."

"சரி, நான்தான் புரிஞ்சுக்கலை. புரிய வையுங்களேன்..."

"உங்க ப்ராஜெக்ட்டுக்குத் தேவையான கேபிடல் எவ்வளவு?"

"அஞ்சு லட்சம்..."

"ரைட். அஞ்சு லட்சமும் நான் தர்றேன். நீ ஆரம்பி. தனியா ஆரம்பி. மண ்கர் வேணாம். பார்ட்னர்ஷிப் வேணாம்.."

"ஏன்? நீங்க சுவாமியோட பார்ட்னர்ஷிப்ல பிஸினஸ் பண்ணலையா?"

"முட்டாள்தனமா பேசாதே! நாங்க ஸ்கூல் லைஃப்லேர்ந்து ஃப்ரெண்ட்ஸ்!"

"ரொம்ப காலமா பழகினாதான் அழுத்தமான நட்பு ஏற்படுமா?"

"அப்படிச் சொல்லலை நான்."

"வேற எப்படி சொல்றீங்க? உங்களோட பயம் என்ன? மணி என்னை ஏமாத்தி பணத்தை எல்லாம் ஏப்பம் விட்டுடுவார்னு நினைக்கிறீங்களா?"

"பணத்தை ஏப்பம் விட்டா ஐ டோண்ட் மைண்ட்!"

"வாட் எல்ஸ்?"

"உன்னையே ஏப்பம் விட்டுடவான்னு எனக்கு கவலையா இருக்கு. அவன் பேச்சு, சிரிப்பு, பார்வை எதுவும் சரியில்லை."

"ஓகோ! மனைவி மேல் சந்தேகம்!"

"என் சந்தேகம் அவன் மேல்தான்."

"இதே மாதிரி சந்தேகப்பட எனக்கும் உரிமை இருக்கு..."

"வாட் டு யு மீன்?"

"தினம் மத்தியானம் ரெண்டு டு நாலு நீங்க பார்கவி வீட்டுக்குப் போய் அவகிட்ட ஹிந்தி டியூஷன் எடுத்துக்கறீங்களே... உங்க ரெண்டு பேரையும் இணைச்சி நான் ஏன் சந்தேகப்படக் கூடாது?"

"அடிப்பாவி! பார்கவிக்கு ரெண்டு குழந்தைங்க உண்டுடி! ஹிந்தி டீச்சர் நம்ம தெருவுலயே இருக்கிறதால எனக்கு போக வர சௌகரியம்னு அவங்ககிட்ட போய்



கத்துக்கறேன். குரு ஸ்தானம் எழிலரசி!"

"அவ புருஷன் வக்கீல். காலைல ஒன்பது மணிக்கு வீட்டை விட்டுப் போனா சாயங்காலம் ஆறு மணிக்குத்தான் திரும்பி வர்றார். குழந்தைங்க ஸ்கூல்லேர்ந்து அஞ்சி மணிக்கு திரும்பறாங்க. யாருமே வீட்ல இல்லாத அந்த மத்தியான தனிமை நேரத்தை எதுக்காக செலக்ட் செஞ்சீங்களாம்?"

"காலைல அவங்க ஒம்பது டு ஒண்ணு ஒரு ஸ்கூல்ல கிளாஸ் எடுக்கறாங்க. ஈவினிங் ஆறு மணிக்கு மேல வீட்லயே சின்னப் பசங்களுக்கு கிளாஸ் எடுக்கறாங்க. சின்னப் பசங்களோட உக்காந்து படிக்க எனக்குக் கூச்சம். எனக்கும் சௌகரியமான நேரம் மத்தியானம் ரெண்டு டு நாலு. என் வியபார வளர்ச்சிக்கு ஹிந்தி தெரிஞ்சா உதவியா இருக்கும்னு நினைச்சுத்தான் கத்துக்கிட்டிருக்கேன். அதைப் போய் கொச்சைப்படுத்திப் பேசறியா?"

"கோபம் வருதுல்ல? அப்படித்தான் எனக்கும் இருக்கும். மணிசங்கரை ஒரு ஃபிரண்டா, ஃபிலாசபரா, கெய்டா நீங்க சொன்ன மாதிரி குரு ஸ்தானத்துல வெச்சுத்தான் நான் பழகிட்டு இருக்கேன். எங்க உறவை நீங்க சந்தேகப்பட்டா எனக்கு எவ்வளவு எரிச்சலா இருக்கும்? அதை நீங்க உணரணும்னுதான் கேட்டேன். இப்பவாவது எங்களோட புது ப்ராஜெக்ட்டுக்கு இதயபூர்வமா சம்மதம் தெரி வியுங்க. ப்ளீஸ்..."

"நோ!" என்று கத்தினான். "நீ ஆயிரம் சொன்னாலும இதில எனக்கு இஷ்டமில்லை. நீங்க என்னதான் ஆரம்ப வேலைகளை துவங்கி யிருந்தாலும் இந்த ப்ராஜெக்ட்டுக்கு என் சம்மதம் கிடைக்காது. ஒத்துழைப்பும் கிடைக்காது."

அவள் கையில் இருந்த சிகரெட் பாக்கெட்டைப் பிடுங்கிக் கொண்டு எழுந்தான். மேஜை மேல் இருந்த கார் சாவியை எடுத்துக் கொண்டு நடக்க...

"இருங்க. எங்க போறீங்க இந்த நேரத்துக்கு?"

திரும்பிப் பார்த்து முறைத்தான். பதில் சொல்லாமல் அறையை விட்டு வெளியேறி படிகளில் இறங்க... அவனைத் தொடர்ந்து வந்தாள் அவள்.

"நீங்க குடிச்சிருக்கிங்க. இந்த நிலைமையில காரை ஓட்டிக்கிட்டுப் போகாதீங்க..."

குரல் கேட்டு வீட்டில் இருந்த வேலைக்காரனும் சமையல்காரனும் எட்டிப் பார்த்தார்கள்.

"ஐ'ம் ஸ்டடி! ஒருவேளை குடிபோதையில காரை ஓட்டி ஆக்சிடெண்ட் ஆகி செத்துப் போய்ட்டேன்னு வெச்சுக்க. உனக்கு ஜாலிதானே? உன் இஷ்டப்படி அப்புறம் முடிவெடுக்கலாம் இல்லையா?"

அதிர்ந்து நின்றாள் எழிலரசி. போர்ட்டிகோவில் நின்ற மாருதியை ஸ்டார்ட் செய்து, கொட்டிக் கொண்டிருந்த மழையில் விரைவாகச் செலுத்தினான் பத்ரிநாத்.




'டிடிடிங்-டாங்! டிடிடிடிடிடிங்-டாங்' காலிங் பெல்லை அழுத்தி விட்டுக் காத்திருந்தான் பத்ரிநாத்.

கதவைத் திறந்தான் சிவநேசன். கழுத்தில் மப்ளர்.

"அட! வாங்க சார்! என்ன இது, போன் கீன் பண்ணாம திடீர்னு..."

"இருக்காளா?"

"இப்பத்தான் தூங்கப் போனா..."

"நான் எழுப்பிக்கிறேன்" என்று கார் சாவியை அவனிடம் நீட்டினான் பத்ரிநாத். சிவநேசன் வாங்கிக் கொண்டான்.

"ஏதாச்சும் வாங்கிட்டு வரணுமா?"

"ஒன் ட்வெண்ட்டி பீடா வாங்கிட்டு... இப்ப மணி என்ன?"

"ஒன்பதரை..."

"ஒரு மணிக்கு வந்தால் போதும்."

"சரிங்க. அப்புறம் ஒரு சின்ன விஷயத்தை ஞாபகப் படுத்தணும்."

"சொல்லு..."

"ஸ்ரீபெரும்புதூர் ப்ளாட்டுக்கு நாளன்னிக்குள்ளே அட்வான்ஸ் கொடுக்கணும்..."

"எவ்வளவு?"

"அம்பதாயிரம்."

"நாளைக்கு காலைல ஆபீசுக்கு வா."

"சரிங்க சார். நான் வேணா வெளில சுத்திட்டு விடி காலைல வர்றேனே... ஒரு மணிக்கு பாதித் தூக்கத்திலே புறப் பட்டுப் போகணுமா?"

"கண்டிப்பா போகணும் சிவா, சந்தேகப்படறா..."

"அய்யோ! தெரிஞ்சு போச்சா?"

"அவ ஒரு அசடு! என்னையும் மாலினியையும் இணைச்சு சந்தேகப் படத் தெரியலை. என்னையும் ஹிந்தி டீச்சரையும் இணைச்சு சந்தேகப்படறா. ஆக லேசா கேரக்டர் மேல சந்தேகம் வந்துடுச்சு..."

"அது கூடாதுங்க. இல்லறம் எப்பவும் ஸ்மூத்தா போவணுங்க. அப்ப நான் ஒரு மணிக்கே வந்துடறேன்."

சிவநேசன் போனதும், கதவை மூடிவிட்டு ஹாலில் வெட் டியாய் சுழன்று கொண்டிருந்த மின்விசிறியை நிறுத்தி விட்டு அருகில் இருந்த படுக்கையறையின் கதவைத் தள்ளித் திறந்தான்.

நீலநிற இரவு விளக்கின் சன்ன வெளிச்சத்தில் கட்டிலில் நைட்டியணிந்து உறங்கிக் கொண்டிருந்தாள் மாலினி. டியூப் லைட்டைப் போட்டான். வெளிச்ச மாற்றத்தில் இமை களைப் பிரித்தவள், அவுட் ஃபோகஸில் இருந்து ஃபோகஸில் அவனைப் பார்த்து, உடனே உற்சாகமாக எழுந்து விட்டாள்.



"அய்யோ! இப்பதாங்க கனவுல நீங்க வந்தீங்க"

"அப்படியா?"

அருகில் வந்து உடனே இறுக்கமாக அணைத்து உதடு களில் முத்தமிட்டான்.

"சிவா எங்கே?"

"கார் கொடுத்து அனுப்பிட்டேன். ஒரு மணிக்குத்தான் வருவான்."

"போன் பண்ணியிருந்தா எல்லாம் வாங்கி வச்சிருப் பேன்ல? பீர்தான் இருக்குன்னு நினைக்கிறேன்."

"எதுவும் வேணாம். ஏத்திக்கிட்டுதான் வந்திருக்கேன்..."

கட்டிலில் அமர்ந்து சிகரெட் எடுத்து உதட்டில் வைக்க, மாலினி பற்ற வைத்தாள். ஆஷ்ட்ரே எடுத்து வந்து அருகில் வைத்து விட்டு அவன் மீது சாய்ந்தபடி அமர்ந்தவளை மடியில் கிடத்திக் கொண்டான்.

"கனவுல நான் என்னவா வந்தேன் மாலினி?"

"சொன்னா சிரிக்கக் கூடாது..."

"சிரிக்கலை, சொல்லு..."

"வெண்டிக்கா, கத்திரிக்கான்னு கூவிக்கிட்டே நீங்க காய்கறி வித்துக்கிட்டு ரோட்ல போறீங்க. இங்கே வாப் பான்னு நான் கூப்புடறேன். என் வீட்டு வாசலுக்கு வந்து கூடையை இறக்கி வைக்கிறீங்க. என்ன காய்கறி வேணும்னு நீங்க கேக்கறிங்க. அதுக்கு நான் காய்கறி எதுவும் வேணாம். என் தோட்டத்தில காய்கறி சரியா விளைய மாட்டேங்குது. கொஞ்சம் வந்து பாரேன் என்ன மிஸ்டேக்குன்னு-னு சொல் றேன். சரின்னு நீங்க என்னோட தோட்டத்துக்கு வர்றீங்க. அப்போ ஒரு வண்டு பறந்து வந்து என் ஜாக்கெட் முதுகுக் குள்ளே போயிடுது."

"அப்புறம்?"

"அதுக்குள்ள நீங்க லைட்டைப் போட்டுட்டீங்க..."

"பாவமே! வண்டை எடுத்துடலாமா?"

அவன் கை அவள் முதுகில் தேடத் துவங்கியது.

"கொஞ்சம் இருங்க. அப்புறம் நான் எது கேட்டாலும் உங்க காதுல ஏறாது..."

"ஸ்ரீபெரும்புதூர் பிளாட்டுக்கு நாளன்னிக்கு அம்பதாயி ரம் அட்வான்ஸ் கட்டணும். அதானே?"

"எப்படித் தெரியும்?"

"வந்ததும் சிவனேசன் சொல்லிட்டான். நாளைக்கு ஆபீசுக்கு வரச் சொல்லியிருக்கேன்..."

"அவன் கிட்ட தரவேணாம் டார்லிங். நான்தான் தினம் ஆபீசுக்கு வர்றேனே. என்கிட்டயே கொடுங்க."

"நோ! இதோ பாரு. ஆபீஸ்ல இந்த மேட்டரைப் பத்தி நீ என்கிட்ட பேசவே கூடாது. அங்கே நான் பாஸ். நீ ஸ்டெனோ. தட்ஸ் ஆல். பேசறது, கொஞ்சறது எல்லாம் இந்த வீட்லதான் வெச்சுக்கணும். புரிஞ்சுதா?"

"சரி" என்றாள். அவன் தலையைக் கலைத்தாள். "அப்பா! உடனே பொசுக்குன்னு கோபம் எப்படி வருது?"

"என் அந்தரங்கம் எப்படி வேணாலும் இருக்கலாம். ஆனா நான் வீட்லயும் வெளிலயும் ஏற்படுத்தி வெச்சிருக்கிற என் இமேஜ் எனக்கு ரொம்ப முக்கியம் மாலினி."

"இவ்வளவு இமேஜ் பார்க்கிற நீங்க எப்படி தைரியமா நம்ம மேட்டரைப் பத்தி வீட்ல பேசி என்னை ரெண்டாந்தாரமா கல்யாணம் பண்ணிக்கப் போறிங்க?"

"நான்தான் சொல்லியிருக்கேனில்ல... இது உடனே நடத்தி முடிக்கிற காரியமில்லை மாலினி. கொஞ்சம் கொஞ்சமா எழிலரசியோட மனசைப் பக்குவப்படுத்தனும். டைம் ஆகும். அதுவரைக்கும் நீ பொறுமையாத்தான் இருக்கணும்."

"சரி, எவ்வளவு டைம் ஆகும்னு உத்தேசமா சொன்னா பொறுமையா காத்திருக்கிறதிலயும் ஒரு அர்த்தம் கிடைக்குமில்ல?"

"என்னால உறுதியா சொல்ல முடியாது. ஆறு மாசமாகலாம். ஒரு வருஷமாகலாம். இரண்டு வருஷம் கூட ஆகலாம். இப்போ வீட்ல எனக்கும் அவளுக்கும் டெர்ம்ஸ் சரியில்லை. மூட் அவுட் ஆகிதான் விருட்டுன்னு புறப்பட்டு வந்தேன்."

"என்ன ப்ராப்ளம் டார்லிங்?"

அவன் விரல்களிலிருந்து சிகரெட்டை வாங்கி சாம்பல் தட்டி விட்டு மறுபடி அவன் விரல்களிடம் ஒப்படைத்தாள்.

"அவளோட ஃபிரண்டு மணிசங்கரோட சேர்ந்து தனியா எக்ஸ்போர்ட் கம்பெனி ஆரம்பிக்கணுமாம். அதுக்கு நான் பணம் தரணுமாம்..."

"பணம் இப்ப முடையா உங்களுக்கு?"

"அதில்லை. அந்த மணிசங்கரை எனக்குப் பிடிக்கலை."

"யாரு, ஆடிட்டர் மணிசங்கர்தானே?"

"ஆமாம். தெரியுமா உனக்கு?"

"அண்ணனுக்குப் பழக்கம். சில தடவை பார்த்திருக்கேன். கழுத்துக்கு மேல அவன் பார்வை நிக்கிறதில்லை."

"அதனாலதான் வேணாம்னு சொல்றேன். ஆனா இவ கேக்க மாட்டேங்கறா. பிடிவாதம். என் சம்மதம் இல்லாமலேயே அடிப்படை வேலைகள் ஆரம்பிச்சுட்டாங்க."

"அதெப்படி நீங்க முதலீடுக்கு பணம் கொடுக்காம அவங்க ஆரம்பிக்க முடியும்?"

"இவளோட பங்கு ரெண்டரை லட்சம். இவளோட சம்பளத்திலேர்ந்து சேமிச்ச பணம் வெச்சிருக்கா கொஞ்சம். மிச்சத்துக்கு அவ வேலை பார்க்கிற கம்பெனில லோன் போட்டுப்பா. இல்லை, வேற ஏதாச்சும் ஏற்பாடு செஞ்சுக்குவான்னு நினைக்கிறேன்."

"நீங்க அவ்வளவு தூரம் இஷ்டமில்லைன்னு சொன்னதுக்கப்புறம் மீறி நடந்தா தாலி கட்டின உங்களுக்கு என்ன



மரியாதை இருக்கு? புருஷன் பேச்சைக் கேட்டு நடக்கறவதானே நல்ல பொண்டாட்டி?" அவன் மார்பு ரோமங்களை நீவியபடி கேட்டவள் தொடர்ந்தாள். "என்ன படிச்சிருந்தா என்ன? என்ன திறமை இருந்தா என்ன? என்ன அழகிருந்தா என்ன? வார்த்தை மீறி நடக்கிற பொண்டாட்டி ஒரு புருஷனுக்கு ரொம்ப அவஸ்தைங்க! அப்படி ஒருத்தியோட வாழறதைவிட அவன் வாழாமலே இருக்கலாங்க..."

"சில சமயம் நானும் அப்படித்தான் நினைக்கிறேன் மாலினி! உலகமே வெறுத்துப் போயிடுது அந்தச் சமயத்தில..."

"என்ன பேச்சு இதெல்லாம்? ஏன் டார்லிங், நான் எதுக்கு இருக்கேன்?" அவனை அப்படியே படுக்கையில் சாய்த்து இறுக்கிக் கொண்டு, "நான் இருக்கிறப்ப உலகம் ஏன் உங்களுக்கு வெறுக்கணும்? அந்த சனியனை விவாகரத்து பண்ணிட்டா பிரச்சனை தீர்ந்தது..." என்றாள்.

திடீரென்று எழுந்து அவளை உதறினான்.

"எடுடி கையை! கொஞ்சம் அசந்தா புகை போட்டு பழுக்க வெச்சிடுவீங்களே... எழிலரசி நான் லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கிட்டவ. எனக்கு உரிமை உள்ள பொண்டாட்டி. இப்பவும் அவளை நான் நேசிக்கிறேன். சில முரண்பாடுகள்தான் உறுத்துது. உன்கிட்ட சொன்னது தப்பா போச்சு. தூபமா போடறே? ஒரு எல்லை தாண்டி உரிமை எடுத்துக்கிட்டா தொலைச்சுடுவேன் தொலைச்சி! டாக்ஸி பிடிச்சி நான் போறேன். சிவாவை காலைல கொண்டாந்து வண்டியை விடச் சொல்லு. விட்ட இடத்திலேர்ந்து கனவு கண்டுகிட்டு படுத்துக் கிட! வர்றேன்..."

விறுவிறுவென்று நடந்து சென்ற பத்ரிநாத்தை ஆத்திரம் முட்டப் பார்த்துக் கொண்டிருந்தாள் மாலினி.




வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக் கொண்டே, "ஃபீஸ் கொண்டு வந்தியோ மருது?" என்றார் வெங்கட்ராமன். நெற்றியில் திரிசூர்ணம். ரோமன் நம்பர்ஸ் கொண்ட சுவர்க் கடிகாரம். அதன் உச்சந்தலையில் வைக் கோலால் கட்டப்பட்ட ஒரு குருவிக் கூடு. இரண்டு மர அலமாரிகள். கண்ணாடி போட்ட கதவுகள் வழியாகத் தெரியும் தடிதடியான சட்டப் புத்தகங்கள். பழுப்பு நிறமேறி பெயிண்ட் உதிர்ந்த ஒரு லொக்கடா ஃபேன் சம்பிரதாயத்திற்காக சுழன்று கொண்டிருந்தது.

மேஜையில் குறுக்கே மடிக்கப்பட்ட கேஸ் கட்டுகள். கண்ணாடிக்கு அடியில் காஞ்சிப் பெரியவாளின் படம். விளிம்புகளில் எல்லாம் செருகப்பட்ட விதவிதமான விசிட்டிங் கார்டுகள்.

இவரின் மேஜை தவிர மற்றொரு மேஜை. அதன் மீது இரண்டாம் கையாக வாங்கப்பட்ட தமிழ் டைப்ரைட்டர், தற்சமயம் பாலிதீன் உறை போட்டு மூடப்பட்ட நிலையில், அதன் எதிர் நாற்காலியில் அமர்ந்து கேஸ் கட்டுகளைப் பிரித்துக் கொண்டிருந்த, காதில் சர்வர் போல பால்பாயிண்ட் பேனா வைத்திருந்த கோபால்தான் வக்கீலுக்கு குமாஸ்தா, டைப்பிஸ்ட், பொடி நடையாய் போய் கீரை வடையும், மசாலா டீயும் வாங்கி வருகிற ஆபீஸ் பாய் எல்லாம். இவருக்கு வெற்றிலை என்றால் அவருக்கு மூக்குப் பொடி.

கேள்வி கேட்கப்பட்ட நபர் வக்கீலுக்கு எதிர்புறம் போடப்பட்டிருந்த நீள பெஞ்சில் சம்மணம் போட்டமர்ந்திருந்தான்.

"தீர்ப்பு வரட்டுங்கய்யா..." என்றான் அவன்.

"ஏண்டா தீவட்டி! பதினைஞ்சி நிமிஷம் விடாம மூச்சு முட்ட ஆர்குயூ பண்ணியிருக்கேன் உன் கேஸில. ஜட்ஜ் அசந்து போய் பார்த்துண்டு இருந்தார். திறந்த பேனாவை மூட மறந்து, இங்க் காய்ஞ்சி போய் உதறி உதறி குறிப்பு எழுதிக்கிட்டதை கவனிச்சியோன்னோ? பின்ன நோக்கு தீர்ப்பு பத்தி என்னவோய் சந்தேகம்? ஏழரை ஏக்கர் நிலமும் உனக்குத்தான். என்ன விலை போறது அங்க?"

"சென்ட் ஆயிரம் ரூபான்னு போகுதுங்க..."

"விடறியே நூலு! ஏக்கர் மூணு லட்சம் சுவாமி. உன் நிலம் ரோட்டு மேல இருக்கு. மூணரைக்குக் குறையாம போகும். ஏழரை ஏக்கர் நிலம் என்ன ஆச்சு? கோபாலு, என்னய்யா ஆச்சு?"

கோபாலு காதிலிருந்து பேனா எடுத்து நியூஸ் பேப்பரின் விளிம்புப் பகுதியில் பெருக்கிப் பார்த்து, "ட்வெண்ட்டி சிக்ஸ் லேக்ஸ் அண்ட் ட்வெண்ட்டி ஃபைவ் தவ்சண்ட் ஆகுது சார்" என்றான்.

"கொசுறை விடு. இருபத்தாறு லட்சம்னு பேசு. அத்தனை பெரிய சொத்தைக் காப்பாத்திக் கொடுத்திருக்கேன். மூஞ்சை ஏண்டா வோல்ட்டேஜ் ட்ராப் ஆன நாப்பது வாட்ஸ் பல்பு மாதிரி வெச்சிண்டிருக்கே?"

"தீர்ப்பு வரட்டுங்க..."

"இவன் ஒருத்தன் வெவரம் கெட்டவன். நாளன்னிக்குத் தீர்ப்பு சொன்னப்புறம் ஸ்வீட்டோட வந்துரு. என்ன?"

"ஸ்வீட் மட்டுமா? உங்களுக்கு எவ்வளவு விசேஷமா மரியாதை பண்றேன்னு பாருங்க சார்..."

டெலிபோன் ஒலித்தது. எடுத்தார்.

"வெங்கட்ராமன் ஸ்பீக்கிங்."

"நான் பார்கவி பேசறேன்னா..."

"எங்கடி? எங்கேர்ந்து பேசறே?"

"இங்கே ஸ்கூல்லேர்ந்து பேசறேன். ஒரே மழைன்னா! ஒரு மணி நேரமா கொட்டறது..."

"இங்கே மழையே இல்லையேடி..."



"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றேள்? பாரீஸ் கார்னல மழை இல்லை. பாண்டி பஜார்ல கொட்டறதே! மெட்ராஸ் என்ன சின்ன ஏரியாவா?"

"இப்ப என்ன பண்ணணுன்ற?"

"ஆத்துக்குப் போவேணாமா? சமைக்க வேணாமா?"

"ஒரு ஆட்டோ பிடிச்சிண்டு போயிடேன்."

"யாரும் வரமாட்டேங்கறா..."

"இங்கேர்ந்து என்னை ஆட்டோ பிடிச்சண்டு அங்க வரச் சொல்றியா?"

"நான் எங்க அப்படி சொன்னேன்? மழை நின்னுதான் ஆத் துக்குப் போகணும். அதுக்கப்புறம் சமையலுக்கு நேரம் இருக் காது. அதனால அங்கேயே பக்கத்தில ஹோட்டல்ல சாப்பிட் டுக்கோங்கோன்னா. அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்."

"அவ்வளவுதானா? வுடு. நான் பார்த்துக்கறேன். வெச்சிரட்டா?" என்று வைத்து விட்டு, "கோபாலா, லன்ச் வராதப்பா. நேஷனல் ஒட்டல்லேர்ந்து எடுத்தாந்துடு" என்றார்.

"ஆகட்டும் சார்..."

"யாரு, மாமியா போன்ல?"

"ஆமாம். மாம்பலத்துல மழை கொட்டறதாம். ஸ்கூல் லேர்ந்து ஆத்துக்குப் போக முடியலைன்னு சொல்றா..."

"இந்த வயசுல என்ன படிக்கிறாங்க?"

"அபிஷ்டு! அவ படிக்கலைடா. சொல்லித் தர்றா. ஹிந்தி டீச்சராக்கும். ஸ்கூல்ல வேலை பார்க்கறா. மார்னிங்கோட கிளாஸஸ் ஓவர்."

"அதான் பார்த்தேன்..."

"என்ன பார்த்தே?"

"நேத்து மத்தியானம் உங்களைத் தேடிக்கிட்டு உங்க வீட்டுக்குப் போயிருந்தேனா, வாசல்ல கப்பல் மாதிரி ஒரு கார் நின்னுது. வீட்டுக்குள்ளருந்து ஹிந்தில குரல் வந்துச்சு. ஏதோ டெல்லி கேசு பிடிச்சுட்டீங்களோன்னு நினைச்சி கதவைத் தட்டினேன். மாமி திறந்து நீங்க இல்லைன்னுட்டாங்க. கோட், சூட் போட்ட ஒரு பெரிய மனுஷன் உள்ளாற சோபால உக்காந்து புஸ்தகம் படிச்சிட்டிருந்தார். எனக்கு எதுவும் புரியாம வந்துட்டேன்."

"அவர் பேரு பத்ரிநாத்டா. எங்க தெருவுலதான் இருக்கார். மீன் பண்ணை வெச்சு நடத்தறார். நல்ல காசு. மாமிகிட்டே ஹிந்தி கத்துக்கறார்..."

கோபால் காது பேனாவை மேஜை மேல் போட்டுவிட்டு, "நான் போய் சாப்பாடு எடுத்துட்டு வந்துடறேன்" என்று புறப்பட்டுச் சென்றார்.

"ஏன் சார்..."

"என்னடா?"

"அந்த ஆள் நல்ல மனுஷன் தானே?"

"ஆமாம். ஏண்டா கேக்கறே?"

"பாடம் சொல்லிக் கொடுக்கறதுக்கு எதுக்கு வாசக்கதவை தாழ்ப்பாள் போடணும்? ஏதோ என் மனசுல பட்டுது. கேட்டுட்டேன். தப்பா இருந்தா மன்னிச்சுடுங்க சார்."

அதிர்ந்து போனார் வெங்கட்ராமன்.

"நல்லால்ல வாயில வருது! என்ன திமிருடா உனக்கு இப்படிப் பேசறதுக்கு? ராஸ்கல்! வாயை அலம்பிண்டு வாடா" என்று அவரின் உதடுகள் சொல்லிக் கொண்டிருந்தனவே ஒழிய...

'அதானே! திஸ் ஈஸ் எ வைட்டல் பாயிண்ட்! எதுக்காக வாசல் கதவைத் தாழ்ப்பாள் போடணும் யுவர் ஆனர்?' என்று அவரின் மனம் ஒரு வாதத்தைத் துவக்கியது முதல் முறையாக.




சுவாமி சேர் பூரா உட்கார்ந்திருந் தான். தொப்பை அருகில் சட்டை விலகி பனியன் காட்டியது. இரண்டு தாடைகள். கழுத்தில் தங்கச் சங்கிலி. நெற்றியில் விபூதிப் பட்டை. நடுவில் குங்குமம்.

பான்பராக் கவரைத் தட்டி பாக்குத் தூள்களை ஒரு பக்கமாகச் சேகரித்து கத்தரிக்கோல் எடுத்து அதன் மூலை யில் முக்கோணமாய் ஒரு துண்டு வெட்டி உள்ளங்கையில் பாதியளவு கவிழ்த்துக் கொண்டு அருகில் அமர்ந்திருந்த பத்ரிநாத்துக்கு நீட்டினான்.

அவன் அதிலிருந்து இரண்டே இரண்டு பெரிய துண்டுகள் மட்டும் எடுத்துக் கொண்டதும், மிச்சத்தை வாயில் கொட்டிக் கொண்டு, "சொல்லு. அப்புறம்?" என்றான்.

"எழிலரசி தன் பிளானை மாத்திக்கிறதா இல்லை" என்றான் பத்ரிநாத்.

பாக்கு மென்றபடி, "மணிசங்கர் நிச்சயமா கவுத்துடப் போறான்னு தான் எனக்குப் படுது. அவன் தேன், சர்க்கரை எல்லாம் தொட்டுத்தான் பேசுவான். கில்லாடி ஆசாமி. ஏதோ பிளான் பண்ணித்தான் உன் வைஃபை டெம்ப்ட் பண்ணியிருக்கான்" என்றான் சுவாமி.

"எனக்கும் அப்படித்தான் படுது. ரெண்டாவது... அவனோட பார்வையும் சரியில்லை சுவாமி. என்னை வெச்சுக்கிட்டே டபுள் மீனிங்ல பேசுவான். இவளும் உள்ளர்த்தம் புரிஞ்சுக்காம சிரிச்சிக்கிட்டிருப்பா."

"நீ நினைக்கிறதுதான் நியாயம் பத்ரி. நாம் எப்படி இருந்தாலும் நம்ம பொண்டாட்டி சுத்தமா இருக்கணும்னு நினைக்கிறதுதான் தமிழர் பண்பாடு!" என்று கண்ணடித்தான்.

"பார்த்தியா, குத்தறியே..."



"நேத்து ராத்திரி நான் கிளப்புல கார்ட்ஸ் விளையாடிட்டுத் திரும்பிப் போனப்போ உன்னோட காரை ஒரு குறிப்பிட்ட வீட்டு வாசல்ல நிறுத்தி இறங்கி உள்ளே போனதைப் பார்த்தேன். சேச்சே, அது நீயா இருக்காதுன்னு எனக்குள்ளே சொல்லிக்கிட்டுப் போயிட்டேன்" என்ற சுவாமி குறும்பாகச் சிரித்தான்.

சுவாமியின் வயிற்றில் செல்லமாகக் குத்தின பத்ரிநாத். "இந்த கிண்டல்தானே வேணாங்கிறது... வீட்ல மூடு அவுட். அதான்.. ஆனா அங்கயும் மூட் அவுட்."

"என்னாச்சு? பெரிய வீடு பிரச்சினையா இருந்தா சின்ன வீட்டுக்குப் போகலாம். சின்ன வீடே பிரச்சினையா இருந்தா எங்க போறது?"

"ஏண்டா இப்படி ஒரு மேட்டர்ல சிக்கிக்கிட்டோம்னு ஃபீல் பண்றேன் இப்போ. முதல் தடவையா மாலினி வீட்டுக்கு காபி சாப்பிடப் போனது தப்பாப் போச்சு."

"என்ன ப்ராப்ளம்? கன்சீவ் ஆகியிருக்காளா?"

"அதெல்லாம் இல்லைப்பா. கல்யாணம் பண்ணிக்கணுமாம். சதா நச்சரிப்பு. எனக்கு சத்தியமா அந்த மாதிரி ஐடியாவே இல்லை."

"சீசனுக்கு வந்து தங்கிட்டுப் போற வேடந்தாங்கல் மாதிரி நீ நினைக்கிறே. அவளுக்கு அந்தஸ்து வேணுமா, இல்லை பணம் வேணுமா?"

"பணம்தான் கேட்டும் கொடுக்கறேன். கேக்காமயும் கொடுக்கறேனே... அந்தஸ்து வேணுமாம்."

"இங்க ஆபீஸ்ல பார்த்தா பூனை மாதிரி இருக்கா. இவ்வளவு விவகாரம் பிடிச்ச பொண்ணா? நல்லவேளை, என்னை அவ காபி சாப்பிடக் கூப்புடலை..."

"அவ பாவம் அப்பாவிதான். அவளுக்கு ஸ்க்ரு ஏத்தி விடறது அவளோட அண்ணன் சிவநேசன்தான். நேத்து நான் போதையில இருந்ததால முட்டாள்தனமா என் வைஃப் என்னை மீறி நடந்துக்கறதை அவகிட்ட உளறித் தொலைச்சிட்டேன். அதான் சாக்குன்னு எனக்கு அவமேல வெறுப்பு வர்ற மாதிரி தூபம் போடறா. பேசாம டைவர்ஸ் பண்ணிட வேண்டியதுதானேன்னு கூசாம சொன்னா. கடுமையா சத்தம் போட்டுட்டு எந்திரிச்சி வந்துட்டேன்."

"இதைத்தான் திரிசங்கு சொர்க்கம்னு சொல்றதா?"

இண்டர்காம் ஒலிக்க, சுவாமி எடுத்துப் பேசி, "பத்ரி, சிவநேசன் வந்திருக்கான். நீ வரச் சொல்லியிருந்தியாமே. சமாதானம் பேச வந்திருக்கான் போலிருக்கு. மாலினி இன்னிக்கு லீவு." என்றான்.

"ரிசப்ஷன்லயே அவனை வெயிட் பண்ணச் சொல்லு..."

சொல்லி விட்டு வைத்ததும், "சுவாமி, என் கணக்கில ஒரு அம்பதாயிரம் வித்ட்ரா பண்ணிக்கிறேன்" என்று செக் புத்தகத்தை எடுத்தான் பத்ரிநாத்.

"எதுக்கு இப்போ அவ்வளவு பெரிய தொகை உனக்கு?"

"ஸ்ரீபெரும்புதூர் பக்கத்தில ஒரு பிளாட் பார்த்துருக்கேன். அதுக்கு அம்பதாயிரம் அட்வான்ஸ் கொடுக்கணும்..."

"புரியுது. மிஸ் மாலினி பேர்ல பத்திரம் ரெஜிஸ்டர் செய்யப் போறே. அப்படித்தானே?"

தயங்கி, "ஆமாம்" என்றான்.

"தேவைதானா இதெல்லாம்?"

"வாக்கு கொடுத்து தொலைச்சுட்டேன் சுவாமி."

"இது உன் பர்சனல் விவகாரம். ஒரு எல்லைக்கு மேல தலையிட எனக்கு உரிமை இல்லை. உன் பர்சனல் விவகாரம் ஆபீஸ் விவகாரத்தைப் பாதிக்கிறப்போ நான் தலையிட வேண்டியிருக்கும் பத்ரி."

"என்ன சொல்றே?"

"உன் கணக்கில இரண்டே கால் லட்சம் அதிகப் பற்றுல இருக்கு. இந்த அம்பதாயிரம் சேர்த்தா கம்பெனிக்கு நீ திருப்பித்தர வேண்டியது ரெண்டே முக்கால் லட்சமாகும். கம்பெனிக்கு ரன்னிங் கேபிடல் பத்த மாட்டேங்குது. அதுக்கு தனியா கடன் வாங்கி யிருக்கோம். இந்த நிலைமைல இந்த ஊதாரித்தனமான செல வெல்லாம் அவசியமா? இப்பதான் நமக்கு நேரடியா எக்ஸ்போர்ட் ஆர்டர் கிடைக்க ஆரம்பிச்சிருக்கு. இன்னும் அஞ்சி வருஷத்தில ரொம்பப் பிரமாதமான கம்பெனியா இதை மாத்திக் காட்டணும்னு நினைச்சிட்டிருக்கோம். இப்போ நீ பொறுப்பில்லாம அதிகப்படியா வித்ட்ரா பண்ணிட்டிருந்தா அது கம்பெனி வளர்ச்சியைப் பாதிக்கும்..."

ரோஷமேறிய பத்ரிநாத், "மைண்ட் யுவர் வர்ட்ஸ் சுவாமி! ஊதாரித்தனம், பொறுப்பில்லாதவன்னு நீ பாட்டுக்கு வாய்க்கு வந்ததை எல்லாம் பேசாதே. கம்பெனிலேர்ந்து அதிகப்படியா நான் எடுத்திருக்கிற பணத்தை ஒரே வாரத்தில செட்டில் பண்றேன். நெருக்கமான ஃபிரண்டுன்னு நான் என்னோட அத்தனை அந்தரங்கத்தையும் சொல்றேன். நீ சொல்றதில்லை. அவ்வளவுதான் வித்தியாசம். ஆராய்ச்சி செஞ்சிப் பார்த்தா உன்னோட அந்தரங்கமும் நாற்றம் பிடிச்சதாத்தான் இருக்கும்..."

"நிறுத்துடா. யாரைப் பார்த்துடா பேசறே? உன்னை மாதிரி கண்ட சாக்கடையிலும் விழுந்து புரண்டுட்டு வர்ற ஜந்துன்னு நினைச்சியா என்னை? ராம் பக்தன்டா. தினம் ஒரு மணி நேரம் பூஜை பண்றவன். ஸ்டெப்னி வெச்சிக்கிட்டு அவளுக்கு லேண்ட் வாங்கிக் கொடுத்துட்டு இருக்கிறவன் இல்லை" என்றான் சூடாக சுவாமி.

முகம் சிவந்தான் பத்ரிநாத். எதுவும் பேசாமல் செக் புத்தகத்தில் ஐம்பதாயிரம் எழுதி சிவநேசன் பேரெழுதி கையெழுத்துப் போட்டுக் கிழித்து அறைக் கதவை வேகமாகத் திறந்து வெளியேறினான்.





அந்தக் குளிரூட்டப்பட்ட அறை அழகுணர்ச்சியுடன் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேஜைக்கு மட்டும் தனியாக ஒரு தொங்கும் விளக்கு. முதுகுப்புறம் உசரமாக ஸ்டைல் நாற்காலி. அதில் எழிலரசி. மேஜைக்கும் தன் மடிக்கும் சாய்வாக தொடர்பேற்படுத்தி வைத்து, வண்ண ஸ்கெட்ச் பேனாக்கள் கொண்டு ஒரு கவுனுக்கான டிசைன் வரைந்து கொண்டிருக்க...

கதவைப் [illegible]தி தள்ளி, "மே ஐ கமின்?" என்றான் மணிசங்கர். ஒ[illegible]லி தாடி, பவர் கண்ணாடி, சுருள் முடி, முழுக்கை சட்டை.

"வா மணி, என்ன இது பர்மிஷன் எல்லாம் கேட்டுக்கிட்டு" என்றாள் எழிலரசி, செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே தூக்கி மேஜை மேல் வைத்து விட்டு.

வந்தான். எதிர் நாற்காலியில் அமர்ந்தபடி, "இது உன் ஆபீஸ். தி கிரேட் டிசைனர். டிஸ்டர்ப் பண்றதால வொர்க் மூடு கெட்டுப் போச்சின்னா?" என்றான். சிரித்தபோது மேல் வரிசைப் பற்களில் ஒன்றுக்கு தங்கக் கவசம் அணிவித்திருப்பது தெரிந்தது.

"இந்த நக்கல் எல்லாம் வேணாம். என்ன சாப்பிடறே? எங்க ஆபீஸ்ல காபி சுமாராத்தான் இருக்கும். டீ நல்லாயிருக்கும். உனக்குப் பிடிக்காதே."

"பரவாயில்லை. டீயே சொல்லு..."

எழிலரசி இண்டர்காமில் டீ சொன்னாள். திறந்திருந்த ஸ்கெட்ச் பேனாக்களை மூடி வைத்தாள். "சொல்லு..."

"நீதான் சொல்லணும் எழில்."

"என்ன?"

"ஹிந்துல கொடுத்த விளம்பரத்துக்கு வந்த ரெஸ்பான்ஸ் மூணு இடங்களை நான் செலக்ட் பண்ணிருக்கேன். மூணுமே நம்ம ஆபீசுக்கு சூட்டான இடம். எப்போ உனக்கு டைம் இருக்குமனு சொன்னா போய்ப் பார்ப்போம். பைனான்ஸ் செய்துட்டா, வாடகை பேசி அட்வான்ஸ் கொடுத்து அக்ரிமெண்ட் போட்டுடலாம்."

சற்றே யோசனையில் ஆழ்ந்தாள் எழிலரசி.

"என்ன எழில் யோசனை?"

"பத்ரிநாத் கிட்ட பல தடவை பேசிப் பார்த்துட்டேன் மணி. அவருக்கு இந்த புது ப்ராஜெக்டில கொஞ்சம்கூட இஷ்டமே இல்லை. இதைப் பத்தி பேச்செடுத்தாலே எனக்கும் அவருக்கும் பெரிய சண்டை வந்துடுது. ரெண்டு பேருக்கும் மூட் அவுட்டாய்டுது..."

"என்ன எழில், இதில நல்ல லாபம் இருக்குன்னு அவருக்குப் புரியலையா? உனக்கு தொழிலைப் பத்தி ரொம்ப நல்லாத் தெரியும். அட்மினிஸ்ட்ரேஷன் அண்ட் அக்க

வுண்டஸ் சைடு நான் பார்த்துக்கப் போறேன். எதனால வேணாங்கறார்?"

தயங்கினாள். பிறகு சொன்னாள். "மணி, நீ தப்பா எடுத்துக்காதே. சில பேர் மேல நமக்கு ஏதோ ஒரு காரணத்தினால நல்ல அபிப்ராயம் விழவே விழாது. உண்மையா?"

"ஆமாம்."

"அந்த மாதிரி அவருக்கு ஏனோ தெரியலை உன்னைப் பிடிக்கலை. உன்கூட சேர்ந்து இதை ஆரம்பிக்க வேணாம்னு சொல்றார். என்னைத் தனியா ஆரம்பிக்கச் சொல்றார்..."

"வெல், உன்னோட புது ப்ராஜெக்ட்டுக்கு என் வாழ்த்துக்கள்" என்ற மணிசங்கர் சட்டென்று எழுந்து கொண்டான்.

"மணி, உட்காரு. கோபப்படாதே. அவரோட யோசனை அது. நான் அதுப்படி முடிவெடுத்துட்டேன்னு சொன்னேனா? அவரோட வாதம் முட்டாள்தனமானதுன்னு எனக்குப் புரியுது. எரிச்சல் கூட வருது. நான் முன்னேற்றம் அடையறது அவருக்குப் பிடிக்கலையோன்னு கூட நினைக்கிறேன். என்னோட தன்மானத்தை ரொம்பவும் பாதிக்கிறார். அதுக்காகவாவது வீம்பா சாதிச்சுக் காட்டணும்னு தோணுது."

"எழில், இந்த தொழில் ஆரம்பிக்கிறதால உன்னோட மனநிம்மதி கெட்டுப் போகும்னா, வேணாம். லெட் அஸ் ட்ராப் இட்."

"இல்லை மணி. எக்காரணத்தைக் கொண்டும் இந்த ஐடியாவை நிறுத்தி வைக்க வேணாம். நாம இதை ஆரம்பிக்கிறோம். அவர் சம்மதிச்சாலும் சரி, சம்மதிக்கலைன்னாலும் சரி."

"சம்மதிக்கலைன்னா எப்படி பணம் கொடுப்பார் எழில்?"

"என் பங்கு ரெண்டரை லட்சம் தானே? என் சொந்த சேமிப்பு ஒன்றரை லட்சம் இருக்கு. எங்கப்பா எனக்குப் போட்ட நகைகளை பேங்க்ல வெச்சி மிச்சம் ஒரு லட்சம் புரட்டுவேன். இப்ப நீ ஃப்ரீயா?"

"ஃப்ரீ தான். ஏன்?"

"என் ஆபீஸ்ல பர்மிஷன் போட்டுட்டு வர்றேன். நீ சொன்ன மூணு இடங்களையும் பார்த்து இன்னைக்கே ஆபீஸ் ஃபிக்ஸ் பண்ணிடலாம். மணி, நான் இதில தீவிரமா இருக்கேன்னு உனக்குத் தெரியணும்."

"அதெல்லாம் சரி, இன்னைக்கே ஃபிக்ஸ் பண்றது சிரமம். ஒரு லட்சமாவது அட்வான்ஸ் தர வேண்டியிருக்கும்..."

"அதான் சொன்னேனே, என் பேங்க் கணக்குல வெச்சிருக்கேன்னு. செக்புக் எடுத்துக்கறேன். கமான், லெட் அஸ் கோ..." என்று எழுந்து கொண்டாள் எழிலரசி.

"ரொம்ப சந்தோஷம் எழில். நீ என்னை நம்பறியே... அது போதும். நாம சாதிச்சுக் காட்டினப்புறம் உன் புருஷனுக்கு நிச்சயம் என்னைப் பிடிக்கும்" என்றான் மணிசங்கர்.





சீவலை வாய்க்குள் அடக்கிக் கொண்டார் வெங்கடராமன். பெட்டியில் இருந்து தளிர் வெற்றிலைகளாகத் தேர்வு செய்தபடி, "கோபாலா" என்றார்.

"சொல்லுங்க சார்" என்றான் கோபாலன் நிமிர்ந்து.

"சிட்பண்ட்ல இன்னிக்குப் பணம் கட்டணும். ஆத்துலேர்ந்து வர்றப்போ சுத்தமா மறந்துட்டேன். உன் மொபெட்ல ஒரு எட்டு ஆத்துக்குப் போய் மாமியாண்ட கேட்டு வாங்கிண்டு வந்துடறியோ?"

"சார், மணி ரெண்டரை ஆச்சு. இனிமே வாங்கிட்டு வந்து எப்ப கட்டறது? இன்னும் டைம் இருக்கே, நாளைக்குக் கூட கட்டலாமே சார்."

"நேக்கு ஒண்ணு பிளான் செஞ்சா அதுப்படி கரெக்டா நடந்துடணும். சிட்பண்ட் ஆபீஸ் அஞ்சரை வரைக்கும் திறந்து வெச்சிருப்பான். நோக்கு போய்ட்டு வர்றது சிரமமாயிருந்தா விட்ரு..."

"அய்யோ! என்ன சார் இது... நீங்க சொல்லி நான் எதைத் தட்டியிருக்கேன்? போய்ட்டு வர்றேன்..."

கோபாலன் மேஜை டிராயரிலிருந்து தன் மொபெட் சாவியை எடுத்துக் கொண்டு புறப்பட்டுப் போனான். ஒரு மணி நேரத்தில் பணத்தோடு திரும்பி வந்து விட்டான்.

"ஏண்டாப்பா, மாமி இருந்தாளோன்னோ...?"

"இருந்தாங்க. உடனே எடுத்துக் கொடுத்துட்டாங்க. வந்துட்டேன்."

"என்ன பண்ணிண்டிருந்தா மாமி?"

"ஹிந்தி டியூஷன் சொல்லிக் கொடுத்துட்டிருந்தாங்க..."

"ஓ! இந்த நேரத்தில கத்துக்க பத்ரிநாத் வருவாரே... மறந்துட்டேன். அவர்தானே இருந்தார்?"

"ஆமாம் சார்..."

"உன்னாண்டை பேசினாரோ?"

"இல்லை, சிரிச்சார். நானும் சிரிச்சேன்."

"கதவு திறந்திருந்திச்சா, இல்லை தாழ் போட்டிருந்துச்சா?"

"சார்!" என்று அதிர்ந்தான் கோபாலன்.

"இல்லேடா கோபாலா. இவ பாட்டுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கற மும்முரத்தில இருப்பா. எவனாச்சும் நைஸா பூந்து பூஜை மாடத்தில இருக்கிற வெள்ளிக் குத்துவௌக்கெல்லாம் லவட்டிக்கிட்டுப் போய்ட்டான்னா? அதனால எப்பவும் கதவை மூடிக்கோன்னு சொல்லி வெச்சிருக்கேன். அதனால கேட்டேன்."

"கதவு மூடிதான் இருந்திச்சி. பெல் அடிச்சதும் மாமி வந்து திறந்தாங்க..."

"அதான பார்த்தேன். நீ வெளிலயே நின்னுட்டியாக்கும்?"

"மாமி கை வேலையா இருந்ததால ரெண்டு நிமிஷம்

வெய்ட் பண்ணச் சொன்னாங்க. அதனால உள்ளாற போய் உக்காந்தேன்."

"ரெண்டரை மணிக்கு என்னடாப்பா சமையல்கட்டுல வேலை?"

"மிக்ஸி சத்தம் கேட்டது. அப்புறம் மாமி பத்ரிநாத் சாருக்கு சாத்துக் குடி ஜூஸ் கொண்டாந்து கொடுத்தாங்க. என்னையும் சாப்பிடறியான்னு கேட்டாங்க. நான் வேணாம்னுட்டு வந்துட்டேன்..."

"பெரிய மனுஷன். நான்தான் காபி, ஜூஸ் இப்படி ஏதாச்சும் கொடுத்துடுன்னு சொல்லி வெச்சிருக்கேன். நம்ம தெருவுலயே இருக்கார். நாளைக்கு ஏதாச்சும் ஒரு பிரச்சனைன்னு வந்தா அவரோட தயவு நமக்கு தேவைப்படலாம் பாரு! சரி, நீ போய் சிட்ஃபண்ட்ல பணத்தைக் கட்டிட்டு வந்துடு" என்றார் வெங்கட்ராமன். கோபாலன் போனான்.

சாத்துக்குடி ஜூஸ்! எந்த டியூஷன் டீச்சர் பாடத்தோடு ஜூஸும் கொடுப்பாள்? என்ன அர்த்தம்? நான் ஒரு ஏமாந்த சோணகிரியா?

வக்கீலுக்குள் மீண்டும் குடைச்சல் துவங்கியது.

மாலை ஆறு மணிக்கு தன் ஓட்டை ஸ்கூட்டரில் வீட்டுக்கு வந்து சேர்ந்து ஹெல்மெட்டைக் கழற்றிக் கொண்டு உள்ளே வந்தார். இரண்டு குழந்தைகளும் கூடத்தில் உட்கார்ந்து விரல்களில் நெய்ல் பாலிஷ் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

"டாடி... இதோ பார்த்திங்களா நெய்ல் பாலிஷ்?" என்றாள் மூத்தவள்.

"அதுக்கென்ன?"

"யார் வாங்கிக் கொடுத்தாங்கன்னு சொல்லுங்க..." என்றாள் இளையவள்.

"யாரு?"

"பத்ரி அங்கிள் வாங்கிக் கொடுத்தாரு."

சக் என்று அம்பு மாதிரி வந்து குத்தி நின்றது.

அறைக்குள் வந்தார். கண்ணாடி முன்னால் நின்ற பார்கவி தன் சேலையை தொப்புளுக்குக் கீழே இறக்கிப் பிடித்துக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தவள் அவர் வருவதைப் பார்த்ததும் சட்டென்று மேலே ஏற்றி விட்டுக் கொண்டாள்.

"வந்துட்டிங்களா? ஸ்கூட்டர் சத்தமே கேக்கலை..."

"என்னடி பண்ணிண்டிருக்கே? நான் பார்த்துட்டேன். சொல்லு..."

"போங்கண்ணா. நேக்கு வெக்கமா இருக்கு..."

"வெக்கமா? இன்னும் இருக்கா?"

"ஊர்ல நிறைய பொம்பளைங்க லோ ஹிப்புல சேலை கட்டறாளே, நேக்கு எப்படி இருக்கும்னு பார்த்தேன். அதுக்குள்ளே வந்துட்டேள்..."



"ஊர் சிரிக்கும். ரெண்டு பெத்துட்டே. ஞாபகமிருக்கோல்லையோ?"

"ஆனாலும் வயசு முப்பத்தி நாலுதானே ஆறது?"

"அதுக்காக என்ன செய்யணுன்றே? ரெண்டாந் தாரமா வாக்கப் பட்டோம்னு அலுப்பு வந்துடுத்தோ?"

"அய்யோ! என்னா இப்படியெல்லாம் பேசறேள்? ஏதோ ஒரு அல்ப ஆசைக்காக தனியா இருக்கறச்சே யாரும் செஞ்சு பாக்கறதுதானே?"

"தனியா இருந்தா எதுவும் செய்யச் சொல்லும்டி. இனிமே தனியா இருக்காதே. யார்றி இவன் என் குழந்தைக்கு வாங்கிக் கொடுக்கறதுக்கு? எனக்கில்லாத ரைட்ஸ் இவனுக்கென்னடி? பணம் இருந்தா சரியாப் போச்சா? சின்ன புத்தி எதுக்குன்னு கேக்கறேன்..."

"என்ன பேசறேள்? யாரைப் பத்திப் பேசறேள்? நேக்கு ஒண்ணும் புரியலை..."

"குழந்தைகளுக்கு நெயில் பாலிஷ் எவண்டி வாங்கிக் கொடுத்தான்? அவனைத்தான் சொல்றேன்..."

"அய்யோ! பத்ரி சாரையா சொல்றேள்? அன்னைக்கு அவர் நம்மாத்துக்கு வந்துருக்கறச்சே குழந்தைகள்தான் அவரைக் கேட்டதுகள். நான் அதட்டினேன். அவர் ஞாபகம் வெச்சிருந்து இன்னிக்கு வாங்கிண்டு வந்து கொடுத்தார். இதுக்குப் போயி ஏன் இப்படி கத்தறேள்? அவர் ஒரு பக்கா ஜெண்டில்மேன்!"

"முதல்ல ஜெண்டில்மேன்னு சொல்வே அடுத்து காதலன்னு சொல்வியா?"

பார்கவி தன் காதுகளை பொத்திக் கொண்டாள். "சிவ சிவா! என்ன பேச்சுன்னா பேசறேள்?" அவள் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

"விளக்கமா எதுவும் பேச விரும்பலை. இனிமே அவன் இங்கே பாடம் கத்துக்க வரவேணாம். எனக்குப் பிடிக்கலை. நீ என்ன சொல்வியோ, எப்படிச் சொல்வியோ நேக்குத் தெரியாது. இனிமே அவன் நம்மாத்துக்கு கண்டிப்பா வரப்படாது. சொல்லிட்டேன்..."

லுங்கிக்கு மாறின வக்கீல் துண்டெடுத்து ஓர் உதறு உதறி தோளில் போட்டுக் கொண்டு பாத்ரூம் நோக்கி நடக்க... அவர் முதுகையே வெறித்துக் கொண்டிருந்தாள் கண் கலங்கிய பார்கவி.




தேதி 10. வியாழன். காலை மணி ஏழு. போலீஸ் ஸ்டேஷன். டெலிபோன் அடிக்க, "ஹலோ" என்றார் சப்-இன்ஸ்பெக்டர் தயாளன்.

"ஹலோ இன்ஸ்பெக்டர் அர்த்த நாரி இருக்காரா?"

"அவர் டிரான்ஸ்ஃபர் ஆகிப் போயி ரெண்டு வருஷமாச்சு, நீங்க யார் பேசறது?"

"நான் ஒரு லாயர். வெங்கட்ராமன் என் பேரு. இன்ஸ்பெக்டர் அர்த்தநாரியை நேக்கு நன்னாத் தெரியும். என்னோட கிளாஸ்மேட். நீங்க யார் பேசறது?"

"சப்-இன்ஸ்பெக்டர் தயாளன்."

"இன்ஸ்பெக்டர் யாரு?"

"ராமமூர்த்தி சார். அவர் ஒரு ஸ்பெஷல் டிரெய்னிங்குக்காக வெலிங்டன் போயிருக்கார்..."

"பரவாயில்லையே... நம்ம அரசாங்கம் அமெரிக்காவுக்கெல்லாம் அனுப்பி டிரைய்னிங் கொடுக்கறதே... பேஷ்..."

"சார், வாஷிங்டன் இல்லை. தமிழ்நாட்டில இருக்கிற வெலிங்டன்."

"அதான பார்த்தேன்..."

"உங்களுக்கு என்ன வேணும்?"

"நான் ஒரு கேஸ் சம்பந்தமா திண்டிவனம் வரைக்கும் போய்ட்டு அதிகாலைல அஞ்சு மணிக்குத்தான் வந்தேன். தூக்கம் வரலை. சரி, குளிச்சுரலாம்னு கிணத்தடிக்கு வந்தேன்..."

"நீங்க கிணத்துக்கு வந்தது, தண்ணி இறைச்சிக் குளிச்சது இதெல்லாம் எனக்குத் தேவையில்லை. மேட்டரைச் சொல்லுங்க சீக்கிரம்."

'மேட்டரே கிணத்துக்குள்ளேதானே இருக்கு. வாளிய சரசரன்னு உள்ளே இறக்கினேனா, அது போய் சொத்துன்னு எதும்மேலயோ மோதித்து. என்னடா இதுன்னு டார்ச் லைட் எடுத்துண்டு வந்து உள்ளார அடிச்சுப் பார்த்தா... எவனோ ஒரு பய மொதக்கறான்..."

"வாட்? யு மீன் டெட்பாடி?"

"செத்துருப்பான்னுதான் நினைக்கிறேன். கொல்லையில தென்னைமரம் நிக்கிது சார். அந்த திருட்டுப்பய ரகசியமா மரத்து மேல ஏறியிருக்கான். கிணத்துக்கு நேர் மேல மரம். அவசரத்தில பறிக்கிறப்போ கிரிப் நழுவிடுத்து. தொபேர்னு உள்ளாற விழுந்துட்டான்."

"நீங்க இதையெல்லாம் பார்த்திங்களா?"

"நான் எங்க ஸ்வாமி பார்த்தேன். இப்படித்தான் நடந்திருக்கும்னு ஒரு வக்கீலுக்கு யூகம் பண்ணத் தெரியாதா?"

"யூகம் எல்லாம் நாங்க பண்ணிக்கிறோம். நீங்க முதல்ல அட்ரஸ் சொல்லுங்கோ..."

"சொல்றேன். சுருக்க ஆளுங்களை கூட்டிண்டு வந்து பாடியை எடுத்துடுங்கோ. கிணத்தை சுத்தம் பண்றதுக்கு என்ன செய்யலாம்னு தெரிஞ்சா நன்னாயிருக்கும். சொல்றேளா?"

"முதல்ல அட்ரஸ் சொல்லுங்க சார்..."



"குறிச்சுக்கங்க. எஸ்.வெங்கட்ராமன், பி.ஏ.பி.எல்., பார்கவி இல்லம். பார்கவி ஆத்துக்காரி பேரு."

"ரொம்ப முக்கியம் இப்போ..."

விலாசம் குறித்துக் கொண்ட தயாளன், ஏட்டு சின்னசாமியையும் இன்னும் இரண்டு கான்ஸ்டபிள்களையும் ஆயத்தப்படுத்தினார். ஆம்புலன்சுக்குத் தகவல் சொன்னார். ஸ்தலத்திற்கு விரைந்தார்.

"ஹலோ, வாங்கோ... நீங்கதான் போன்ல பேசின சப்-இன்ஸ்பெக்டர் தயாளனா? யங்காதான் இருக்கேள். ஐம் வெங்கட்ராமன். இவதான் பார்கவி. குழந்தைகள் ரெண்டும் தூங்கறதுகள். பாடி எடுத்துண்டுப் போறவரைக்கும் எழுப்ப வேண்டாம்னுட்டேன். பயந்துக்கும்..." என்றார் வக்கீல்.

"கிணறு எங்கே இருக்கு?"

"பூட்ஸ் போட்டிருக்கேள். சந்து வழியா வந்துடறேளா? சுவாமி படம் எல்லாம் இருக்கறது. பின்னாலதான் கிணறு..."

வீட்டின் சைடில் இருந்த சந்தில் உடைந்த டியூப்லைட்டுப் பைகள் எல்லாம் மிதித்துக் கொண்டு பின்புறம் வந்தார்கள். கூட நின்று கிணற்றுக்குள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த அக்கம் பக்கத்து வாசிகள் விலகிக் கொண்டார்கள்.

தயாளன் எட்டிப் பார்த்தார்.

ஒரு பிணத்தின் முதுகுப் பகுதி தெரிந்தது. நீல நிற சட்டை உப்பலாக இருந்தது. தலைமுடி அசைந்தது. ஒரு தவளை அந்த தலையில் கால் வைத்து அடுத்த ஜம்ப் செய்தது.

"கயிறு கிடைக்குமான்னு பாருங்க. முதல்ல வெளில எடுங்க..." என்ற தயாளன் கூட்டத்தைப் பார்த்து, "பக்கத்து வீடுகள்ல இருக்கிறவங்க தவிர மத்தவங்க எல்லாம் போகலாம்" என்றார்.

என்றதும் அடுத்த விநாடி ஸ்டாப் ப்ளாக்கில் அத்தனை பேரும் காணாமல் போய்விட்டார்கள். ஒரு கர்ச்சீப்பால் மூக்கைப் பொத்திய படி ஸ்டூல் ஒன்றைத் தூக்கி வந்து போட்ட வக்கீல், "உட்காந்துக்கோங்கோ. அர்த்தநாரி இருக்காரே..." என்று துவங்க...

"கொஞ்ச நேரம் சும்மா இருங்க சார். நான் உங்களை விசாரிக்கிறப்ப பதில் சொன்னாப் போதும்..."

பத்து நிமிடங்களில் அந்தப் பிணம் மேலே இழுக்கப்பட்டு தரையில் கிடத்தப்பட்ட விநாடி, "அடப்பாவி! இவரா?" என்றார் வக்கீல்.

"யாரு இது? உங்களுக்குத் தெரியுமா?"

"சார், இவர் பேரு பத்ரிநாத் சார். மீன் பண்ணை வெச்சி நடத்தறார் சார். பெரிய பணக்காரர். இதே தெருவுலதான் இவர் பங்களா இருக்கு. என் மிஸஸ் ஹிந்தி பண்டிட் சார். இவர் என் வைஃப் கிட்ட ஹிந்தி கத்துண்டிருந்தார். அடப்பாவமே! இவர் எப்படி இங்க வந்து... இதென்ன கூத்தா இருக்கு? இந்தாளுக்கு என்ன குறைச்சல்? தற்கொலை பண்

ணிக்க என்ன அவசியம்? அப்படியே பண்ணிக்கணும்னாலும் என் ஆத்துக் கிணறுதான் கிடைச்சதா? பார்கவி! அடியே பார்கவி, இங்க வந்து பாருடி இந்தக் கொடுமையை..."

"சார், கொஞ்ச நேரம் புலம்பாம இருங்க. இது தற்கொலைன்னு யாராச்சும் உங்க கிட்ட சொன்னாங்களா? கழுத்தைப் பாருங்க. கயிறோ எதுவோ போட்டு நெரிச்சிருக்காங்க. கொலை பண்ணி கிணத்துக்குள்ளே போட்டிருக்காங்க..."

"அய்யோ! கொலையா?" என்று நெஞ்சைப் பிடித்துக்கொண்ட வக்கீல், "தலையைச் சுத்தறது" என்று ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டார்.

தயாளன் மடங்கி அமர்ந்து சற்றே உப்பிப் போயிருந்த பத்ரிநாத்தின் உடலை ஆராய்ந்தார். நீலநிற பேண்ட், நீல நிற சட்டை, கையில் டைட்டான் வாட்ச், சட்டை பாக்கெட்டில் எதுவும் இல்லை. பேண்ட் பாக்கெட்டில் மணிபர்ஸ் இருந்தது.

அதில் பத்ரிநாத்தும் எழிலரசியும் இணைந்த புகைப்படம் இருந்தது. தவிர நனைந்த ரூபாய் நோட்டுக்கள், நனைந்த விசிட்டிங் கார்டுகள், பத்ரிநாத்தின் அலுவலக விலாசம் தாங்கிய அட்டைகள்.

"இந்த போட்டோவைப் பாருங்க. இவரோட இருக்கறது இவங்க வைஃபா?"

"ஆமாம் சார். மாடர்னா இருப்பா. கண்ணுக்கு லட்சணமா இருப்பா. அவளுக்குப் பூவும் பொட்டும் கொடுத்து வைக்கலை. ஒரு ரெடிமேடு எக்ஸ்போர்ட் கம்பெனில டிசைனராவோ என்னவோ வேலை. என்ன சொத்து இருந்து என்ன... பாருங்க, மனுஷாளுக்கு ஆயுசு பொசுக்குன்னு முடிஞ்சி போறது... கொலைகார படுவா என்னத்துக்காக என் ஆத்து கிணத்துல கொண்டாந்து போடணும்? ராஸ்கல்! குடிக்கிற ஜலம் கற்கண்டாட்டம் இருக்கும். தெருவே நம்மாத்து கிணத்துல தண்ணி எடுத்துண்டு போகும். வத்தினதே இல்லை."

"ஏன் சார், ஒரு உயிர் போயிருக்கு. உங்களுக்கு கிணறு பத்திதான் கவலையா? உங்களை அப்புறம் விசாரிக்கிறேன். எங்கயும் போயிடாதீங்க. இவரோட பங்களா எங்கே இருக்குன்னு சொல்லுங்க முதல்ல..." என்றார் தயாளன்.




தயாளனும், ஏட்டு சின்ன சாமியும் மட்டும் பத்ரிநாத் வீட்டிற்கு வந்து வேலைக்காரனிடம், "மிஸஸ் எழிலரசி இருக்காங்களா?" என்றதும்...

"குளிச்சிட்டிருக்காங்கன்னு நினைக்கிறேன். உக்காருங்க" என்றான் அவன்.



உட்கார்ந்து, "சரி. அவங்க குளிச்சிட்டு வரட்டும். மிஸ்டர் பத்ரிநாத்தைக் கூப்புடுப்பா. அவர் கிட்டயும் ஒரு மேட்டரைப் பத்திப் பேச வேண்டியிருக்கு" என்றார் தயாளன்.

"அய்யா வீட்ல இல்லைங்களே..."

"எங்க போயிருக்கார்?"

"தெரியலைங்க. அம்மாவைக் கேட்டாத் தெரியும்..."

"எப்பப் போனார்னு தெரியுமா?"

"தெரியலைங்க. நான் வந்தப்பவே அவர் இல்லைங்க. நான் வர்றதுக்கு முன்னாலயே புறப்பட்டுப் போயிருக்காருன்னு நினைக்கிறேன்..."

"நீ எப்ப வந்தே?"

"ஆறு மணிக்கு வந்தேன் சார்..."

"எத்தனை பேர் வேலை பாக்கறீங்க இந்த வீட்ல?"

"நானும் சமையல்கார தியாகுவும்தான் சார். ரெண்டு பேருமே காலைல ஆறு, ஆறே காலுக்கு வருவோம். ராத்திரி ஏழரை, எட்டுக்கு வீட்டுக்குப் போயிடுவோம்."

"அப்படியா? இந்த வீட்ல அய்யா, அம்மாவைத் தவிர வேற யார் யார் இருக்காங்க?"

"வேற யாருமில்லை சார்..."

"குழந்தைங்க?"

"அவங்களுக்குக் கல்யாணமாகி மூணு வருஷம்தானே சார் ஆகுது? மெதுவா பெத்துப்பாங்க..."

"காலைல நீ வேலைக்கு வந்ததும் அய்யா வெளில போயிருக்கிறதா அம்மா சொன்னாங்களா?"

"அம்மா என்ன சொல்றது? வாசல்ல மாருதி இல்லையே. அய்யா மாருதில போவாரு. அம்மா அம்பாசிடர்ல போவாங்க. அம்மாவுக்கு காபி கொண்டு போய் கொடுத்தப்போ அய்யா வெளில போயிருக்கிறதா அவங்களும் சொன்னாங்க..."

"ரெண்டு பேரும் சந்தோஷமாத்தானே இருக்காங்க?"

"காசு இருந்தா சந்தோஷத்துக்கு என்ன சார் குறைச்சல்?"

"உன் பேரென்ன?"

"வேலப்பன் சார். வேலுன்னு கூப்புடுவாங்க..."

"சரி, அம்மா குளிச்சிட்டாங்கன்னா வரச் சொல்லு..."

"இதோ பார்க்கறேன் சார்..."

அவன் மாடிக்குப் போய்த் திரும்பினான்.

"ரெண்டு நிமிஷத்துல வந்துடறேன்னாங்க சார். காபியோ, டீயோ கொடுக்கச் சொன்னாங்க. எது கொண்டாரட்டும் சார்?"

"எதுவும் வேணாம்..."

படிகளில் இறங்கி வந்த எழிலரசியைப் பார்த்து திகைத்துப் போனார் தயாளன். இத்தனை அழகா? நெற்றியில் குங்குமம் அவரைத் தாக்கியது. எப்படிச் சொல்வது?

"வணக்கம். என்ன விஷயம் சார்?" என்று எதிர் சோபாவில் காஷுவலாக அமர்ந்தாள். போலீஸ்காரர்கள் வீடு தேடி

வந்திருக்கிறார்களே என்று எந்தப் பதட்டமும் தெரியவில்லை.

"மிஸ்டர் பத்ரிநாத் இல்லையா?" என்றார் தயாளன்.

"இல்லை. வெளில போயிருக்கார்..."

"பாஸ்போர்ட்டுக்கு அப்ளை செஞ்சிருக்காரா அவர்?"

"அப்படியா? எனக்குத் தெரியலையே..."

"பண்ணிருக்கார். அதனாலதான் வெரிஃபிகேஷனுக்கு வந்திருக்கோம். அவர் உங்க ஹஸ்பெண்ட் தானே?"

"ஆமாம்..."

"எங்க போயிருக்கார்? எப்ப வருவார்? மறுபடி நாங்க தேடிட்டு வர முடியாது மேடம். அவர் இருந்துட்டா பேசி கிளியர் செய்துட்டுப் போயிடுவோம். பத்து நிமிஷத்தில அவர் வந்துடுவார்னா வெய்ட் பண்றோம்..."

"சார், டு பீ ஃப்ராங்க்... அவர் எங்க போயிருக்கார்னு எனக்குத் தெரியலை. அதனால எப்ப வருவார்னு சொல்ல முடியலை..."

"என்ன மேடம், எப்ப போனார் அவர்?"

"நேத்து ராத்திரி பதினோரு மணிக்குப் போனார்..."

"உங்க கிட்ட சொல்லிட்டுப் போகலையா?"

"இல்லை. ஒரு போன் வந்துச்சு சார். அவர்தான் அட்டெண்ட் செஞ்சார். பேசி வெச்சிட்டு உடனே சட்டை, பேண்ட் போட்டுக்கிட்டார். எங்க போறீங்க இந்த நேரத்தில, போன் செஞ்சது யாருன்னு விபரம் கேட்டேன். எனக்கு எந்த பதிலும் சொல்லாம கார் சாவியை எடுத்துக்கிட்டுப் புறப்பட்டுப் போனார். காலைலேர்ந்து அவர் எங்க போனார்னு புரியாம நானும் தவிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன். வந்ததும் உங்களை வந்து பார்க்கச் சொல்றேன். எந்த ஸ்டேஷன் சார்?"

இது நடிப்பென்றால், இவளுக்கு ஊர்வசிப் பட்டம் தரப் பட வேண்டும் என்று நினைத்துக் கொண்டார் தயாளன்.

"அது இருக்கட்டும். நீங்க கேட்டதுக்கு உங்களுக்கு ஏன் பதில் சொல்லாம போனார்? உங்களுக்குள்ளே எதுவும் பிரச்னையா?"

"ஒரு சின்ன ப்ராப்ளம் சார். ஒரு வாரமாவே நாங்க ரெண்டு பேரும் கொஞ்சம் கோபமா இருக்கோம். தட் ஈஸ் அவர் பர்சனல் மேட்டர். அதுக்கு மேல கேக்காதீங்க..."

"ரைட்டு, உங்க ஹஸ்பெண்ட் என்ன தொழில் செய்றார்?"

"மீன் பண்ணை வெச்சிருக்கார். சுவாமிங்கற பார்ட்னரோட சேர்ந்து நடத்தறார்."

"என்ன கார் எடுத்துட்டுப் போனார்?"

"மாருதி எய்ட் ஹண்டரட். ஏன் சார்?"

"நம்பர் சொல்லுங்க..." சொன்னாள். சொன்ன பிறகு மெதுவாக எழிலரசியின் முகத்தில் கலவரம் படர்ந்தது.

"சார், நிஜமா நீங்க அவர் பாஸ்போர்ட்டுக்கு அப்ளை செய்திருக்கிறது சம்பந்தமா விசாரிக்கத்தான் வந்தீங்களா? கார் நம்பரெல்லாம் கேக்கறதைப் பார்த்தா... சார், ஏதாச்சும் விபத்து மாதிரி...? ப்ளீஸ், சொல்லுங்க சார், எனக்குப் பதறுது..." அவள் குரலில் நடுக்கம் இருந்தது.

"விபத்து மாதிரிதான். கொஞ்சம் மனசைக் கல்லாக்கிக்கிட்டு எங்களோடு வாங்க. வந்து அடையாளம் பார்த்துச் சொல்லுங்க. இந்த தெருவுலதான்" என்ற தயாளன், "சின்ன சாமி, இவங்களை கூட்டிட்டுப் போய்க் காட்டுங்க. நான் ஒரு போன் பண்ணிட்டு பின்னாடியே வந்துடறேன்" என்றார்.

ஏட்டு சின்னசாமி பின்னால் எழிலரசி ஓட்ட நடையில் வக்கீல் வெங்கட்ராமன் வீட்டுக்கு விரைந்தாள்.

தயாளன் அங்கிருந்த டெலிபோனில் டிராஃபிக் டிபார்ட்மெண்ட்டைத் தொடர்பு கொண்டு காரின் எண்களைச் சொல்லி தேடச் சொல்லி விட்டு...

"வேலு, இங்க வாய்யா" என்றார். ஜன்னலை துணி போட்டு துடைத்துக் கொண்டிருந்த வேலு வந்து, "அய்யா!" என்றான்.

"இதபாரு! இப்ப நான் கேக்கற கேள்விக்கு ஒளிவு மறைவு எதுவும் இல்லாம உள்ளது உள்ளபடி சொல்லணும். ஏதாச்சும் மறைச்சு பேசறதா தெரிஞ்சது... அப்புறம் உன்னை இங்க வெச்சு இந்த மாதிரி நயமா விசாரிக்க மாட்டேன்..."

அந்த வேலு நடுங்கிப் போய் விட்டான்.

"அய்யா, எனக்குத் தெரிஞ்சதை சாமி சத்தியமா உண்மையைச் சொல்றேங்க. கேளுங்கய்யா..."

"காலைல நீ வந்தப்போ நிஜமா அய்யா இங்கே இல்லையா?"

"சத்தியமா இல்லைய்யா..."

"சரி, அய்யாவுக்கும் அம்மாவுக்கும் ஒரு வாரமா சண்டை. சரியா பேசிக்கிறதில்லை. நிஜம்தானே?"

சற்றுத் தயங்கி விட்டு, "ஆமாங்க" என்றான்.

"ஏன்? என்ன பிரச்சினை?"

"முழு விபரம் தெரியாதுங்க. தெரிஞ்ச வரைக்கும் சொல்றேங்க. அம்மாவும் அவங்க ஃப்ரண்டு ஆடிட்டர் மணிசங்கர் சாரும் சேர்ந்து ஒரு வியாபாரம் ஆரம்பிக்கணும்னு பேசறாங்க. எங்கய்யாவுக்கு அதில இஷ்டம் இல்லை. வேணாங்கறாரு. இவங்க ஆரம்பிச்சே தீருவேண்ணாங்க. அவரு கூடவே கூடாதுன்றாரு. ரெண்டு பேரும் பிடிவாதமா நிக்கறாங்க. அதனால அடிக்கடி சண்டைங்க. வெளிய எப்பவாவது குடிச்சிட்டு இருந்தவரு, இப்ப என்னை விட்டு பாட்டில் வாங்கிட்டு வரச் சொல்லி வீட்லயே குடிக்கிறாருங்க..."

"அப்படியா? புதுசா ஒரு தொழில் ஆரம்பிச்சா நல்லது தானே? இவரு ஏன் வேணாம்னு சொல்றாரு?"

"இவரு எங்க வேணாம்னு சொன்னாரு? அந்த ஆடிட்டரோட சேர்ந்து செய்ய வேணாம்னுதான் சொல்றாரு. தனியா ஆரம்பி, முழுப்பணமும் தர்றேன்னு சொல்றாரே..."

"ஏன் ஆடிட்டரோட சேர்ந்து செய்யக் கூடாதுன்றார்?"

"அது தெரியலைங்க. யாருக்குமே ஒரு தயக்கம் இருக்குமுங்களே. ஆடிட்டரோ கல்யாணம் ஆகாத சின்ன வயசுக்காரரு. அவரோட சேர்ந்து தொழில் பண்றதுன்னா அம்மா ரொம்ப நேரம் அவரோட போக, வர இருக்கணுமில்ல? அது அய்யாவுக்குப் பிடிக்கலைன்னு நானா நினைக்கறேங்க..."

"சரிதான். நேத்து நீ வேலையை முடிச்சு எப்ப வீட்டுக்குப் போனே?"

"எட்டாயிடுச்சிங்க. தியாகு, நான் ரெண்டு பேரும்தான் புறப்பட்டுப் போனோம்..."

"அப்போ வீட்ல அய்யா, அம்மா ரெண்டு பேரும் இருந்தாங்களா?"

"இருந்தாங்க..."

"நேத்தும் அவங்களுக்குள்ளே சண்டை வந்துச்சா?"

"நேத்து அவங்களுக்குள்ளே சண்டை வரலை சார். ஆனா அய்யா போன்ல அவரோட பார்ட்னரோட காரசாரமா சத்தம் போட்டுக்கிட்டிருந்தார்."

"எத்தனை மணிக்கு?"

"ஏழிருக்கும்..."

"காரசாரமான்னா? இவர் என்ன பேசினார் போன்ல? அப்படியே சொல்லு பார்க்கலாம்..."

"என்னை என்ன ஒண்ணுமில்லாத பிச்சைக்காரன்னு நினைச்சியா? இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே கணக்குப் பார்த்துடலாம். எனக்குச் சேர வேண்டியதைக் கொடுத்துடு. நான் வியபாரத்திலேர்ந்து விலகிக்கறேன். இனிமே உன்னோட சேர்ந்து தொழில் பண்றதுக்கு நான் தயாரில்லைன்னு கத்தினார். அப்போ கொஞ்சம் தண்ணி வேற உள்ளே போயிருந்திச்சி சார். அம்மா உடனே இவர்கிட்ட, 'ஆபீஸ்ல என்ன பிரச்னை? ஏன் பார்ட்னர்ஷிப்லேர்ந்து விலகறதாச் சொல்றீங்க? சுவாமி என்ன சொன்னார்?'னு கேட்டாங்க. அதுக்கு 'உன்கிட்ட நான் விளக்கம் சொல்லத் தேவையில்லை'ன்னு மூஞ்சில அடிச்ச மாதிரி சொல்லிட்டாரு. அதுவும் என்னை வைச்சுக்கிட்டு சொல்லிட்டாரு. அம்மா மூஞ்சி சின். ஈாப் போயிடுச்சு. விருட்டுன்னு போயிட் டாருங்க..."

சமையல்காரன் தியாகுவை அழைத்து அவனையு. கேள்விகளால் துளைத்தார். வேலு சொன்ன தகவல்களையொட்டியே அவனும் சொன்னான்.

"இந்தத் தெருவுல ஒரு ஹிந்தி டீச்சர் இருக்காங்களே, தெரியுமா?"

"தெரியும் சார். அவங்க புருஷன்கூட வக்கீலு. அந்தம்மாகிட்ட எங்கய்யா ஹிந்தி டியூஷன் படிச்சிட்டிருந்தார். அந்தம்மாவுக்கு என்ன சார்?"

"அந்தம்மாவுக்கு எதுவும் இல்லை. அவங்க வீட்டு கிணத்துல நேற்று ராத்திரி உங்க அய்யாவை யாரோ கொலை



செஞ்சி தூக்கிப் போட்டுட்டுப் போய்ட்டாங்க" என்றதும் இரண்டு பேரும் அதிர்ந்தார்கள்.



இப்போது இந்தக் கொலை தொடர்பாக தயாளன் நடத்திய விசாரணைகளின் தொகுப்பைப் பார்க்கலாம்.

ஒரு நிமிஷம்... இந்த விநாடி உங்கள் மனதில் ஓடிக் கொண்டிருக்கும் கேள்வி 'குற்றவாளி யார்?' என்பதுதான். இல்லையா? இந்த விசாரணைகளை உன்னிப்பாக கவனித்தால் தயாளனுக்கு முன்னால் நீங்களேகூட கண்டு பிடித்து விடலாம்.

**1. தயாளன் and வெங்கட்ராமன்**

"இந்தக் கொலையைப் பத்தி உங்க கருத்து என்ன?"

"இதென்ன நாட்டுப் பிரச்னையா? இதில நான் கருத்து சொல்றதுக்கு என்ன இருக்கு? எவனோ வேண்டாதவா குத்திப் போட்டுட்டுப் போய்ட்டான். நீங்க என்னைக் கேள்வி கேட்டுண்டிருக்கேள்..."

"குத்திப் போடலை. கழுத்தில கயிறு போட்டு நெரிச்சிருக்கான்."

"ஏதோ ஒண்ணு. மர்டர்ட்! செக்ஷன் 302ல வர்றது. எங்காத்து கிணத்துல ஏன் போட்டுட்டுப் போனான்?"

"அதான் இப்ப எங்க கேள்வியும்..."

"பேஷ்! நான் கேக்கற கேள்வியை என்னையேத் திருப்பிக் கேக்கறேளா? நான் இந்தக் கொலையை துப்பறிஞ்சு உங்களுக்கு பதில் சொல்லணும்னு எதிர்பார்க்கறேளா?"

"சார், முதல்ல இந்த நக்கல் பேச்சை விடுங்க. பி சீரியஸ். டெட்பாடி உங்க வீட்டுக் கிணத்துலேர்ந்து எடுத்திருக்கோம்."

"அதனால?"

"கொஞ்சம் ரெஸ்பான்சிபிளா பதில் சொல்லுங்க. உங்களுக்கும் மிஸ்டர் பத்ரிநாத்துக்கும் ஏதாச்சும் பகை உண்டா?"

"போச்சுரா! வரம் கொடுத்தவன் தலையிலயே கையை வெக்கிறதும்பாளே, அப்படில்ல இருக்கு! நானே கொலையை செஞ்சி என் வீட்டு கிணத்துக்குளளே போட்டுட்டு, அப்புறம் நானே உங்களுக்கு போன் பண்ணி பொணம் மொதக்கறதும்பேனா? என்னைப் பார்த்தா அவ்வளவு அசடனாத் தெரியறேனா?"

"நீங்க கொலை செஞ்சிங்கன்னு யார் சொன்னாங்க இப்போ?"

"பகை இருக்கான்னு கேட்டா என்ன சார் அர்த்தம்?

என்னை சந்தேகப்படறிங்கன்னு தானே அர்த்தம்?"

"ஒரு லாயர் நீங்க. போலீஸ்காரன் எல்லாரையும் சந்தேகப்பட்டுத் தான் தீரணும்னு புரியாதா உங்களுக்கு? விசாரிச்சு தெளிவுக்கு வந்ததும் ஒவ்வொருத்தரா சந்தேக லிஸ்ட்லேர்ந்து விலக்கிடுவோம்."

"அப்போ இப்போதைக்கு லிஸ்ட்ல நானும் வர்றனா?"

"நிச்சயமா. நீங்க மட்டும் இல்லை. உங்க மிஸஸும் கூட. அவசியப்பட்டா ஸ்டேஷனுக்கு அழைச்சுட்டுப் போய் கூட விசாரிக் கலாம்..."

"திஸ் ஈஸ் என் இன்சல்ட் இன்ஸ்பெக்டர்!"

"தோள்பட்டையில ரெண்டு ஸ்டார் இருந்தா சப்-இன்ஸ்பெக்டர்! கொஞ்சம் உங்க ஈகோவைத் தள்ளி வைச்சுட்டு பதில் சொன்னா தேவலாம்..."

"என்ன சொல்லணும்? கேட்டுத் தொலைங்கோ. பார்கவி, வாடி இப்படி. உன்னையும் சந்தேகப்படறாராம். கேள்வி கேப்பார். பதில் சொல்லு..."

"உங்களுக்கும் பத்ரிநாத்துக்கும் ஏதாச்சும் சண்டை உண்டா?"

"இல்லை, எதுவும் இல்லை."

"சார், எங்கப்பா பொய் சொல்றார். ஏன்ப்பா பொய்யே சொல்லக் கூடாதுன்னு சொல்லுவியே. ஏன் இப்படி பொய் சொல்றே? உனக்கும் பத்ரி அங்கிளுக்கும் சண்டைதானே?"

"ஏய் சனியனே, உள்ளப் போடி!"

"இரு பாப்பா. ஏன் சார் குழந்தையை விரட்டறீங்க? நீ இங்க வாம்மா... என்ன சொல்றே நீ? உங்கப்பாவுக்கும், பத்ரி அங்கிளுக்கும் சண்டையா?"

"ஆமாம்."

"எப்படி பாப்பா சொல்றே?"

"பத்ரி அங்கிள் எங்களுக்கு புதுசா நெய்ல்பாலீஷ் வாங்கிக் கொடுத்தார். அதை நாங்க அப்பா கிட்ட காட்டினோம். அப்பாவுக்கு கோபம் வந்துடுச்சு. அம்மாகிட்ட அவன் யாரு என் குழந்தைங்களுக்கு வாங்கிக் கொடுக்கிறதுக்குன்னு கத்தினாரு. இனிமே ஹிந்தி டியூஷன் படிக்கிறதுக்கு அவன் வீட்டுக்கு வரக் கூடாதுன்னு அம்மா கிட்ட சத்தம் போட்டாரே. அப்படின்னா சண்டைன்னுதானே அர்த்தம்?"

"ஆமாம் பாப்பா. ஏன் சார், உங்க பொண்ணு சொல்றது உண்மையா?"

"ஆமாம். என் குழந்தைகளுக்கு அவன் பிரசண்ட் பண்ணினது நேக்குப் பிடிக்கலை. அதனால என் பொண்டாட்டி கிட்டதான் கத்தினேன். அவன் சட்டையைப் பிடிச்சு சண்டைக்குப் போகலை. இதை வைச்சிக்கிட்டு நேக்கும் அவனுக்கும் பகைம்பேளா?"

"அவர் குழந்தைகளுக்கு அன்பா வாங்கிக் கொடுத்ததில நீங்க அவ்வளவு தூரம் கோபப்படறதுக்கு என்ன இருக்கு?"

"இது நேக்கு பிரஸ்டீஜ் மேட்டர் சார். என் குழந்தைங்களுக்கு நெய்ல் பாலீஷ் வாங்கித்தர வக்கில்லாம இருக்கேனா நானு? அதான் கோபம் வந்துருச்சு. சத்தம் போட்டேன்."

"இனிமே டியூஷனுக்கு அவர் வரக்கூடாதுன்னு சொல்ற அளவுக்கு கோபப்பட என்ன இருக்கு இதுல?"

"இவா இவா இன்ன இன்னதுக்காகத் தான் கோபப்படணும்னு லோகத்துல ஏதாச்சும் லிஸ்டு வெச்சிருக்கேளா? நேக்குப் பிடிக்கலை. கோபப்பட்டேன். விடறேளா? இதைப் போய் துருவிக்கிட்டு..."

"ஓக்கே. நேத்து எந்த ஊருக்குப் போயிருந்ததா சொன்னீங்க?"

"திண்டிவனத்துக்கு."

"எப்பப் போனீங்க?"

"நேத்திக்கு காலைல புறப்பட்டுப் போனேன்."

"சரி, எப்ப திரும்பி வந்தீங்க?"

"இன்னிக்கு அதிகாலைல அஞ்சி மணிக்கு வந்து சேர்ந்தேன்."

"எதில போனீங்க? எதில வந்தீங்க?"

"பஸ்லதான்."

"எந்த பஸ்?"

"போனப்ப அரசு பஸ். சைதாப்பேட்டையில ஏறினேன். வர்றப்ப பிரைவேட் பஸ். பேர் கவனிக்கலை. இப்படி ஒரு விவகாரம் வந்து சேரும், போலீஸ்காரா வந்து விசாரிப்பான்னு நேக்குத் தோணலை. இல்லைன்னா கவனிச்சு வெச்சுண்டிருப்பேன். பஸ் ஸ்டாண்ட் வந்தேன். மெட்ராஸ் போற பஸ்சுன்னு போர்டு பார்த்து ஏறி உக்காந்து தூங்கிண்டே வந்து சேர்ந்தேன்."

"டிக்கெட் வாங்கினீங்களா?"

"காக்கிச் சட்டை போட்டிருக்கேளேன்னு மரியாதை கொடுத்துப் பேசினா ரொம்பத்தான் சத்தாய்க்கிறேளே... வாங்கலைய்யா. சும்மா ஓசில உக்காந்து வந்தேன். போதுமா?"

"கோவிச்சுக்காம அந்த பஸ் டிக்கெட்டை கொஞ்சம் காட்ட முடியுமா?"

"அதான் வாங்கலைங்கறேனே... டிரைவர் நமக்கு தோஸ்த்து. ஓசிலயே கொண்டாந்து விட்டுட்டான்."

"சரி, நான் கேட்டது தப்பு. டிக்கெட் காட்டுங்க..."

"என்ன சார் டிக்கெட் செக்கர் மாதிரி இத்தனை கறாரா கேக்கறேளே... இப்படி விசாரணைக்குத் தேவைப்படும்னு நேக்கென்ன ஜோசியம் தெரியுமா? பஸ்சை விட்டிறங்கினதுமே ஒரு கடையில சூடா காப்பி சாப்பிட்டேன். பணம் கொடுக்கறச்சே டிக்கெட்டும் கையோட வந்தது. கிழிச்சுப் போட்டேன். கொண்டா, கொண்டான்னா எங்கேர்ந்து

கொண்டாறது?"

"சரி, நீங்க திண்டிவனத்தில யாரைப் பார்க்கப் போனீங்க, எத்தனை மணிக்கு எங்க இருந்தீங்கன்னு ஃபுல்லா எழுதிக் குடுங்க."

"தாராளமா தர்றேன். நேக்கென்ன பயம்?"

"உங்களுக்கு கார் டிரைவிங் தெரியுமா?"

"தெரியும். ஆனா கார்தான் இல்லை. எதுக்குக் கேட்டேள்?"

"சும்மாதான். நீங்க டீட்டெய்ல்ஸ் எழுதுங்க. அதுக்குள்ளே உங்க மிஸஸை விசாரிச்சுடறேன்."

"பேஷா. பார்கவி, சாருக்கு பதில் சொல்லுடிம்மா..."

## 2. தயாளன் and திருமதி. பார்கவி

"ஏம்மா, பத்ரிநாத் உங்ககிட்ட ஹிந்தி கத்துக்கிட்டிருந்தாரா?"

"ஆமாங்க..."

"எத்தனை நாளா?"

"நாலு மாசமா சார்..."

"அவரோட வேற யார் கத்துக்கிட்டாங்க?"

"மத்தியானம் ரெண்டு மணிக்கு அவர் வந்து கத்துண்டிருந்தார். அந்த சமயம் வேற யாரும் வர்றதில்லை. ஈவினிங்தான் மத்தப் பிள்ளைங்கள்லாம் வர்றா..."

"நேத்து வந்திருந்தாரா?"

"வந்திருந்தார்."

"அப்செட்டா இருந்தாரா?"

"ஆமாம்."

"ஏன்? கேட்டிருப்பீங்களே..."

"எங்கிட்ட அவர் பர்சனல் விஷயமெல்லாம் ஷேர் பண்ணிப்பார். அவர் மிஸஸ் ஒரு ஃபிரண்டோட சேர்ந்து எக்ஸ்போர்ட் பிசினஸ் ஆரம்பிக்க விரும்பறதாவும் அந்த பார்ட்னரை இவருக்குப் பிடிக்காததால இவர் வேணாம்னு மறுத்ததாகவும் அதனால அடிக்கடி சண்டை வர்றதாகவும் சொன்னார்."

"அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"சொல்ற விதமா பக்குவமா எடுத்துச் சொன்னேள்னா புரிஞ்சுப்பாங்கன்னு சொன்னேன். அவா குடும்பப் பிரச்னையில இதுக்கு மேல நாம என்ன சொல்ல முடியும்?"

"அது சரிதான். நீங்க அவருக்கு ஹிந்தி டியூஷன் எடுத்ததுல உங்க ஹஸ்பெண்டுக்கு அவ்வளவா சம்மதமில்லையா?"

"அப்படியெல்லாம் எதுவும் இல்லை."

"பின்னே ஏன் குழந்தைகளுக்கு அன்பா வாங்கிக் கொடுத்ததுக்கு அப்படி கோபப்பட்டாரு?"



"சார், வயசு ஏறினாலே ஒரு மனுஷனுக்கு எதிலயும் நம்பிக்கை போயிடும். இவர் வக்கீல் வேறயா? எதுக்கெடுத்தாலும் சந்தேகம். நான் ஒரு ஸ்கூல்ல வேற வேலை பார்க்கறேன். அதுல வர்ற சம்பளமும் வேணும். ஆனா ஸ்கூலுக்கு ஒரு நல்ல டிரெஸ் போட்டுண்டு கொஞ்சம் நீட்டா அலங்கரிச்சுண்டு போனா கத்துவார். ரெண்டு பிள்ளைங்க பெத்தப்புறம் என்னத்துக்கு இன்னமும் பின்னல் விடறே? கொண்டை போடுன்னு சொல்றவர். ரெண்டாந்தாரமா வாழ்க்கைப்படலாம் சார். ஆனா ரொம்ப வயசு வித்தியாசத்துலே கல்யாணம் பண்ணக் கூடாது. நான் சொல்றது உங்களுக்குப் புரியற தோல்லியோ?"

"புரியுதுங்க. பத்ரிநாத் கிட்ட நீங்களும் சகஜமா உங்க பர்சனல் விஷயங்களைப் பேசுவீங்களா?"

"நேக்கு பர்சனல்னு என்ன இருக்கு இந்த வீட்ல? குழந்தைகள் படிப்பு, சமையல்னு எதையாச்சும் சொல்றதுதான்."

"இந்தாங்க சார், நீங்க கேட்ட முழு டீடெய்ல்ஸ். நேத்து திண்டிவனத்தில யாரை எத்தனை மணிக்குப் பார்த்தேன், எந்த ஹோட்டல்ல சாப்பாடு சாப்பிட்டேன், எங்க பீடா போட்டேன்னு எல்லாம் எழுதியிருக்கேன். போதுமோல்லியோ?"

"போறும்."

"என்ன பார்கவி, கேட்டு முடிச்சுட்டாரா?"

"கேட்டுட்டார்."

"புள்ளைங்களையும் கூப்புடு. அவாளையும் ஏதாச்சும் கேக்கணுமோ என்னவோ?"

"இல்லை. தேவையில்லை சார். இப்ப நான் கேட்ட கேள்விகளையும், நீங்க சொன்ன பதில்களையும் ஒரு ஸ்டேட்மெண்டா தயாரிச்சு அனுப்பி வைக்கிறேன். கையெழுத்துப் போடுங்க. உங்க மிஸஸை இன்னும் கொஞ்சம் கேக்க வேண்டியிருக்கு. ஏம்மா, உங்க வீட்டுக்காரர் திண்டிவனத்திலேர்ந்து திரும்பினப்போ நீங்க எழுந்திருச்சுட்டீங்களா?"

"இல்லை சார். அவர் பெல் அடிச்சதும்தான் முழிச்சேன்."

"நேத்து ராத்திரி உங்க வீட்டு சந்துல, பின்பக்கத்தில ஏதாச்சும் நடமாட்டம், சத்தம் கேட்டதா?"

"பொதுவாவே நான் நன்னா அசந்து தூங்கிடுவேன் சார். கொசுத் தொல்லைக்காக வீட்ல எல்லா ஜன்னலையும் சாத்திட்டு வேற தூங்கறதால எதுவும் கேக்கறதில்லை."

"சரிம்மா, தேங்க்ஸ்..."

"தாய்க்குலத்துக்கு மட்டும்தான் தாங்க்ஸ் சொல்றது பழக்கமா?"

"தாங்க்ஸ் சார்..."

"எல்லாம் சரி, பொணம் விழுந்த கிணத்தை எப்படி சுத்தம் பண்றது?"

"விசாரிச்சு சொல்லியனுப்பறேன். அப்புறம் ஒரு விஷயம்..."

"என்ன?"

"நான் சொல்றவரைக்கும் நீங்க வெளியூர் போறதா இருந்தா என்கிட்ட தகவல் சொல்லிட்டுத்தான் போகணும் சார்..."

### 3. தயாளன் and எழிலரசி

"மேடம், உங்க சோகம் ஆறுதல் வார்த்தைகளால சரியாகறதில்லை. ஆனா வீ ஆர் ஹெல்ப்லெஸ். குற்றவாளியைக் கண்டுபிடிக்கிறதில உங்க ஹெல்ப் தேவைப்படுது. ஒத்துழைச்சா நல்லது."

"விசாரிக்க வேண்டியது உங்க கடமை. கேளுங்க சார்..."

"போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வந்துடுச்சு. முந்தா நாள் ராத்திரி பதினொன்றரை மணிலேர்ந்து பனிரெண்டு மணிக்குள்ளே மரணம் ஏற்பட்டிருக்கலாம்னு அது சொல்லுது. அடுத்து... பத்ரிநாத் ஓட்டிட்டுப் போன மாருதி காரை மெரீனா பீச்சல கடற்கரை உள் ரோட்டுல கண்டுபிடிச்சோம். அந்தக் கார்ல எந்தத் தடயங்களும் கிடைக்கலை. கார் சாவியோட நிறுத்தப்பட்டிருக்கு. இப்போ அது ஸ்டேஷன்ல இருக்கு. அதிலேர்ந்து ரேகைகளை சேகரிச்சுட்டு உங்க கிட்ட ஒப்படைக்கிறோம். அவருக்கு ராத்திரி போன் வந்ததும் புறப்பட்டுப் போனதா சொன்னீங்க. எத்தனை மணிக்கு போன் வந்திச்சு?"

"பதினோரு மணி இருக்கும்..."

"அப்போ நீங்க எங்க இருந்தீங்க?"

"பெட்ரும்ல புக் படிச்சிட்டிருந்தேன்..."

"அவர் என்ன பண்ணிட்டிருந்தார்?"

"சிட் அவுட்ல சேர் போட்டு உக்காந்து சிகரெட் பிடிச்சிட்டிருந்தார்."

"போனை நீங்க எடுத்தீங்களா, அவர் எடுத்தாரா?"

"அவர்தான் எடுத்தார்."

"சரி. போன் அடிச்சதால படிப்புலேர்ந்து உங்க கவனம் நிச்சயம் கலைஞ்சிருக்கும். அந்த நேரத்தில கூப்புடறது யாருன்னு இயல்பா ஒரு ஆர்வம் ஏற்பட்டிருக்கும். அதனால பத்ரிநாத் போன்ல என்ன பேசறார்னு கவனிச்சிருப்பீங்க. நான் சொல்றது சரியா?"

"ஆமாம் சார். கவனிச்சேன்..."

"கொஞ்சம் நல்லா யோசிச்சு அவர் பேசின வார்த்தைகளை அப்படியே எக்ஸாக்டா சொல்ல முடியுமா?"

"முதல்ல 'ஆமாம். பத்ரிநாத் தான் பேசறேன்'னு சொன்னாரு. அப்புறம் 'நீங்க யாரு'ன்னு கேட்டாரு. 'என்ன விஷயம் சொல்லுங்க'ன்னாரு. அப்புறம் எதிர்முனையில சொல்லப்படற விஷயத்தைக் கவனிச்சாரு. நடுவுல என்னை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தாரு. 'ஆதாரம் இருக்கா'ன்னாரு. 'சரி. வர்றேன்'னு சொன்னாரு. வச்சிட்டாரு..."

"ஸோ, அறிமுகமில்லாத நபர் அவரை உடனே புறப்பட்டு



பீச்சுக்கு வரச் சொல்லி கூப்பிட்டிருக்கார். ஏதோ ஒரு ஆதாரம் காண்பிக்கிறதா இல்லை கொடுக்கிறதா சொல்லியிருக்கான்னு வெச்சுக்கலாமா?"

"அப்படித்தான் தோணுது..."

"அவர் வீட்டை விட்டு காரெடுத்துட்டுப் போனப்புறம் நீங்க யாருக்காவது போன் செஞ்சிங்களா?"

"இல்லை."

"உங்களுக்கு ஏதாவது போன் வந்துச்சா? யோசிச்சு சொல்லுங்க..."

"இல்ல. வரல்லை சார்..."

"சரி. யாராச்சும் அந்த நேரத்தில உங்களைப் பார்க்க வந்தாங்களா?"

"இல்லை."

"உங்க வீட்ல சுசூகி சாமுராய் இருக்கா?"

"இல்லை."

"ராத்திரி பனிரெண்டு மணிக்கு தன் வீட்டு பால்கனிக்கு வந்த எதிர்வீட்டுக்காரர் உங்க வீட்டு வாசல்ல ஒரு சுசூகி சாமுராய் வண்டி நிக்கிறதைப் பார்த்ததாக சொல்லியிருக்காரே..."

"யெஸ், மணிசங்கர் வந்திருந்தார். அவரோட பைக்தான் அது..."

"இப்ப கேட்டப்ப யாரும் வரலைன்னீங்களே..."

"மறந்துட்டேன்..."

"மணிசங்கர் எத்தனை மணிக்கு வந்தார்?"

"அவர் புறப்பட்டு வெளில போன பத்து நிமிஷத்துல வந்தார்."

"எப்போ திரும்பிப் போனார்?"

"ஒரு மணி நேரம் கழிச்சு போனார்."

"ராத்திரி அந்த நேரத்துல அவர் உங்களைத் தேடி வந்ததுக்கான காரணம்?"

"நாங்க ஆரம்பிக்க இருக்கற புதுத் தொழில் சம்பந்தமா மறுநாள் டெல்லி போறதா இருந்தார். டெல்லில அவர் யாரைப் பார்க்கணும், என்ன பேசணும்னு டிஸ்கஸ் பண்றதுக்காக வந்தார். ராத்திரி ஒரு மணி வரைக்கும் பல தடவை நாங்க டிஸ்கஸ் பண்ணியிருக்கோம்."

"பத்ரிநாத் வீட்ல இருக்கிற சமயங்களிலயும் அந்த மாதிரி லேட் அவர்ஸ்ல மணிசங்கர் வீட்டுக்கு வந்து டிஸ்கஸ் பண்ணிட்டுப் போயிருக்காரா?"

"ஓ! பல தடவை வந்திருக்கார்."

"நீங்களும், மணிசங்கரும் சேர்ந்து புதுசா தொழில் ஆரம்பிக்கிறதில உங்க கணவருக்கு பூரண சம்மதமா?"

"இல்லை. இதில அவருக்கு சம்மதமில்லை. எங்களுக்குள்ளே சின்ன மனவருத்தம்னு சொன்னேனே. இதைத்தான்."

"அவருக்கு ஏன் இதில சம்மதமில்லை?"

"மணிசங்கரை அவருக்குப் பிடிக்கலை."

"எதனால பிடிக்கலை?"

"என்னவோ தெரியலை. முதல்லேர்ந்து அவருக்கு மணி சங்கரைப் பிடிக்கலை."

"ஆனா உங்க கருத்து என்ன அவரைப் பத்தி?"

"ஜெம்! ஜென்டில்மேன்!"

"ஆனா ஹஸ்பண்டுக்குப் பிடிக்கலைன்னு தெரிஞ்சும் நீங்க அவரோட சேர்ந்து பிசினஸ் செய்ய ஆர்வம் காட்டினது ஏன்?"

"பிடிக்காததுக்கு சரியான காரணம் சொல்லியிருந்தா ஏத்துக்கிட்டு என் பிளானை விட்டிருப்பேன். முட்டாள்தன மான வாதமா இருந்ததால எனக்கு நல்ல லாபம் தர்ற தொழி லைத் துவங்கற ஐடியாவை டிராப் பண்றதில இஷ்ட மில்லை..."

"உங்களை சங்கடப்படுத்தற கேள்வி இது. தப்பா நினைக்காதீங்க. பத்ரிநாத்துக்கு உங்க கேரக்டர் மேல சந்தேகம் உண்டா?"

"இல்லை. மணிசங்கர் கேரக்டர் மேலதான் சந்தேகம்."

"உங்களுக்கும் மணிசங்கருக்கும் நெருக்கம் எப்படிப் பட்டது?"

"நாங்க டீசன்ட்டான நல்ல நண்பர்கள்."

"சரி, பத்ரிநாத்துக்கு எதிரிகள் உண்டா?"

"அப்படி என்னால யாரையும் யூகம் செய்ய முடியலை..."

"சமீபத்தில யாரோடவாவது ரொம்ப கோபமா சண்டை போட்டாரா?"

"ஆமாம். அன்னைக்கு ஈவினிங் போன்ல அவரோட பார்ட்னர் சுவாமி கிட்ட ஆத்திரமாப் பேசினார். பார்ட்னர் ஷிப்லேர்ந்து விலகிக்கறதாகவும் ஒரு வாரத்தில கணக்கு பார்த்து செட்டில் செய்யச் சொல்லியும் ரொம்ப கோபமாப் பேசினார். நான் காரணம் கேட்டதுக்கு சொல்லலை."

"இந்தக் கொலையை யார் செய்திருக்கலாம்னு நினைக் கறீங்க?"

"புரியலை சார். எனக்கு சொல்லத் தெரியலை..."

"சரி, பத்ரிநாத்தோட கேரக்டர் எப்படி?"

"நல்லவர். ஆனா கொஞ்சம் கோபக்காரர். எப்ப எதுக்கு கோபப் படுவார்னு தெரியாது."

"லேடீஸ் விஷயத்துல எப்படி?"

"அழகான பொண்ணுங்களைப் பார்த்தா கொஞ்சம் வழி வார். ஆனா எனக்குத் துரோகம் செய்திருக்கார்னு யாராச்சும் சொன்னா என்னால நம்ப முடியாது."

"ஹிந்தி எதுக்கு கத்துக்கிட்டார்?"

"அவரோட பிசினஸ் சம்பந்தமா டெல்லி போறப்ப சரியா பேச முடியாம திணற வேண்டியதா இருக்கேன்னு கத்துக் கிட்டார்."



"ஹிந்தி டீச்சர் பார்கவி கிட்ட ஒரு தனிமையான நேரத் தில கிளாஸ் எடுத்துக்கிட்டதுக்கு ஏதாச்சும் தனியான காரணம் உண்டா?"

"அந்த நேரம்தான் தனக்கு செளகரியமா இருக்குன்னு சொன்னார்."

"மறுபடி ஒரு சங்கடமான கேள்வி. ஹிந்தி டீச்சர் பார்கவி வக்கீலுக்கு ரெண்டாந்தாரம். ரெண்டு பிள்ளைங்களைப் பெத்திருந் தாலும் அழகா, கவர்ச்சியா இருக்காங்க. அதனால அவங்க மேல பத்ரி நாத்துக்கு ஒரு ஈர்ப்பு இருந்திருக் கலாமா?"

"தெரியலை சார். நான் அவரை நம்பினேன். அவரோட ஆபீஸ்ல வேலை பார்க்கிற சில பொண்ணுங்க கூட அழகா இருப்பாங்க. ஒவ்வொருத்தங்க கூடவும் அவரை சம்பந்தப் படுத்தி பார்த்துட்டிருந்தா மனசில நிம்மதி போயிடும். என்கிட்ட அவர் சின்சியரா இருந்தார்னு தான் நம்பினேன்."

"அவசியப்பட்டா மறுபடி விசாரிக்க வருவேன். தேங்க்ஸ்."

### 4. தயாளன் and மணிசங்கர்

"பத்ரிநாத்தை யார் கொலை செய்திருப்பாங்கன்னு நினைக்கிறீங்க?"

"தெரியலை சார்..."

"அவர் மிஸஸோட உங்க பழக்கம் எப்படிப்பட்டது?"

"தூய்மையான நட்பு சார்."

"நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து பிசினெஸ் ஆரம்பிக்கிற தில பத்ரி நாத்துக்கு சம்மதமில்லைன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்."

"எப்படித் தெரியும்?"

"எழிலரசியே சொன்னாங்க..."

"அதுக்கப்புறமும் நீங்க முயற்சிகளைத் தொடர்ந் தீங்களா?"

"ஆமாம். எழிலரசிகிட்ட வேணும்னா ப்ராஜெக்டை நிறுத் திடலாம்னு சொன்னேன். அவங்கதான் பிடிவாதமா தொடர விரும்பினாங்க..."

"உங்ககிட்ட என்ன பைக் இருக்கு?"

"சுசூகி சாமுராய்."

"கார் ஓட்டுவீங்களா?"

"ஓட்டுவேன்..."

"கொலை நடந்த நேரம் ராத்திரி பதினொன்றரை யிலேர்ந்து பனிரெண்டுன்னு போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் சொல்லுது. அந்த நேரத்தில நீங்க எங்கே இருந்திங்கன்னு சொல்ல முடியுமா?"

"என் வீட்டுலதான் இருந்தேன்."

"நிச்சயமா?"

"நிச்சயமா."

"அன்னைக்கு உங்க பைக்கை யாருக்காச்சும் இரவல் தந்திருந்திங்களா?"

"இ)லை."

"பனிரெண்டு மணிக்கு உங்க பைக் எழிலரசி வீட்டு போர்ட்டிகோல நின்னுட்டிருந்ததா எதிர்வீட்டுக்காரர் சொல்லியிருக்காரே..."

"பனிரெண்டு மணிக்கு இருக்காது சார். பதினொன்றரை மணிக்கு இருக்கும்."

"அப்போ நீங்க அங்க போயிருந்தீங்களா?"

"ஆமாம்."

"இப்போ கொஞ்சம் முன்னால வீட்லதான் இருந்தேன்னு சொன்னீங்க?"

"பனிரெண்டு மணிக்கு எங்கே இருந்தீங்கன்னு கேட்டீங்க... அப்ப நான் வீட்டுக்குத் திரும்பிட்டேன். அதனால வீட்ல இருந்ததா சொன்னேன்."

"பதினொன்னே காலுக்கு ீங்க அங்க வந்ததா எழிலரசி சொல்லியிருக்காங்க."

"இருக்கலாம். அப்ப நான் டைம் பார்க்கலை."

"ஒரு மணி நேரம் பேசிட்டிருந்துட்டுப் புறப்பட்டதாச் சொன்னாங்க. அது சரியா இருந்தா பனிரெண்டு மணிக்கு எதிர்வீட்டுக்காரர் உங்க பைக்கைப் பார்த்ததும் சரி. நீங்க வீட்ல இருந்ததாச் சொன்னது மட்டும் தப்பாகும். ஏம் ஐ ரைட்?"

"எழிலரசி ஒரு உத்தேசத்தில சொல்லியிருப்பாங்க. நான் அங்க அரை மணி நேரம் கூட இருந்திருக்க மாட்டேன்..."

"சரி, என்ன விஷயமா போயிருந்தீங்க?"

"மறுநாள் டெல்லி போறதா இருந்தேன். டெல்லி ப்ரோக்ராம் பத்தி கொஞ்சம் டிஸ்கஸ் பண்ண வேண்டியதா இருந்திச்சி"

"இந்த மாதிரி லேட் அவர்ஸ்ல போனதுண்டா அங்கே?"

"பல தடவை போயிருக்கேன். அந்த நேரம்தான் வேற தொல்லைகள், போன் தொல்லைகள் இல்லாம டிஸ்கஸ் பண்ண முடியும்..."

"உங்களுக்குக் கல்யாணமாயிடுச்சா?"

"இன்னும் இல்லை."

"பத்ரிநாத்துக்கு உங்களை ஏன் பிடிக்கலை?"

"அது அவரைத்தான் கேக்கணும்..."

"அவரை இனிமே கேக்க முடியாதுங்கறதாலதான் உங்களைக் கேக்கறேன். எதுக்கு அவருக்கு நம்மைப் பிடிக்கலைன்னு நீங்க யோசிச்சு வெச்சிருப்பீங்களே..."

"சில பேருக்கு காரணமே இல்லாம சிலரைப் பிடிக்காது



சார்."

"என்னால ஒரு காரணம் யோசிக்க முடியுதே மணிசங்கர். நீங்களோ கல்யாணமாகாத இளைஞர். எழிலரசியோ அழகான இளம் மனைவி. நேச்சுரலி நான் பத்ரிநாத் இடத்தில இருந்தாலும் லேசா ஒரு சந்தேகம் வருமே..."

"இது வீணான சந்தேகம். பஞ்சும் நெருப்பும் பத்திக்கும்னு ஒரு பழமொழி சொல்வாங்க. ஒரு நெருக்கத்துக்கு மேல போனாதான் பத்திக்கும். தீக்குச்சியில மருந்து இருக்கு. தீப்பெட்டியில மருந்து இருக்கு. தீப்பெட்டியை பேசாம விட்டுட்டா என்ன டேஞ்சா இருக்கு? எடுத்து உரசினாத் தானே நெருப்பு வரும்?"

"ரெண்டும் பக்கத்துல இருக்கிறதால உரச சான்ஸ் இருக்குன்னு நினைக்கிறதில தப்பில்லையே..."

"தண்டவாளத்து மேல ஓடற ரயில் கவிழ்றதுக்கு எப்பவும் சான்ஸ் இருக்கு. அதை நினைச்சுக்கிட்டு ரயில்லேயே ஏறாம இருந்துடுறமா? சில ரயில்கள் கவிழத்தான் செய்யும். அதுக்காக எல்லா ரயிலுமா? சந்தேகப்படறதுன்னு ஆரம்பிச்சுட்டா எதிலயும், எங்கயும் சந்தேகப்படலாம் சார். பைத்தியம்தான் பிடிக்கும்."

"சரி, நான் ஒண்ணு சொல்றேன். உங்களுக்கும் எழிலரசிக்கும் ரகசியமா ஒரு காதல் உண்டு. ரெண்டு பேருக்கும் தொழில்ல முன்னேறணும்னு துடிப்பு. ஒரே விதமான ரசனைகள். எதுக்கெடுத்தாலும் கோபப்படற பத்ரிநாத் மேல எழிலரசிக்கு வெறுப்பு. உங்களைப் பிடிக்காத அவர் மேல உங்களுக்கும் வெறுப்பு. அதனால சம்பவம் நடந்த அன்னைக்கு நீங்களும், எழிலரசியுமா சேர்ந்து பத்ரிநாத் கழுத்தில கயிறு போட்டு இறுக்கி கொலை செய்துட்டு, அதே தெருவுல இருக்கிற ஹிந்தி டீச்சர் வீட்டுக் கிணத்தில போட்டுட்டு, மாருதி காரைக் கொண்டு போய் பீச்சுல நிறுத்திட்டு போலீஸ் கேட்டா 'போன் வந்துச்சு, புறப்பட்டுப் போனார்'னு சொல்லலாம்னு தீர்மானிச்சுட்டு விலகிட்டிங்கன்னு நான் சந்தேகப்படறேன். என்ன சொல்றீங்க?"

"மை காட்! இது அப்பட்டமான கற்பனை!"

"எதையும் எப்படியும் சந்தேகப்படலாம்னு இப்ப நீங்கதானே சொன்னீங்க?"

"அதுக்காக? உங்க சந்தேகத்துக்கு ஒரு அர்த்தம் வேணாமா? எந்த ஆதாரமும் இல்லாம சும்மா கற்பனையா சந்தேகப்பட்டா எப்படி சார்?"

"வெல், வர்றேன். ஆதாரத்தோட மறுபடி வர்றேன். அதுவரைக்கும் வெளியூர் எதுவும் போகாம இருங்க. பை தி பை, உங்க டெல்லி ட்ரிப் என்னாச்சு?"

"கான்சல் பண்ணிட்டேன்- அவரோட மரணத்தால!"

"நீங்க டிக்கெட் புக் செஞ்சது, கேன்சல் செஞ்சது இதக்கான ஆதாரங்களைத் தரமுடியுமா?"

"நிச்சயமா. இருங்க எடுத்துத் தர்றேன்."

**5. தயாளன் and சுவாமி**

"உங்க நண்பர் கொலை செய்யப்பட்டது பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?"

"என்னால அந்த அதிர்ச்சியை ஜீரணிக்கவே முடியலை சார்..."

"யார் செய்திருப்பாங்கன்னு நினைக்கறீங்க?"

"எனக்குத் தெரியலை சார்..."

"உங்களுக்கும் அவருக்கும் உறவு எப்படி இருந்திச்சு?"

"நாங்க பெஸ்ட் ஃப்ரண்ட்ஸ் சார்."

"அப்படியா? உங்களுக்குள்ளே சச்சரவுகள் எதுவும் ஏற்பட்டதில்லையா?"

"இல்லை சார்."

"பின்னே எதுக்காக போன்ல உங்ககிட்ட பார்ட்னர்ஷிப்லேர்ந்து விலகிக்கிறதா கோபமா கத்தணும்? ஒண்ணு ஏதாச்சும் பிரச்சினை இருக்கணும். இல்லைன்னா அவருக்கு வியாதி இருக்கணும். இந்த ரெண்டு சாய்சும் இல்லைன்னுட்டா எப்படி?"

"அது வந்து சார்... ஒரு சின்னப் பிரச்சனை ஏற்பட்டது சார். அதுக்கு பெரிசா கோபப்பட்டான் அவன்."

"முதல்ல சண்டை இல்லைன்னு சொன்னீங்க. அவர் போன்ல சத்தம் போட்டது எனக்குத் தெரிஞ்சு குறிப்பிட்டுக் கேட்டப்புறம் ஆமாம்னு ஒத்துக்கறீங்க. ஏன் இப்படி ஒரு நிமிஷத்துக்குள்ளே மாத்திப் பேசறீங்க?"

"செத்தவன் மேல களங்கம் சுமத்த வேணாமேன்னு நினைச்சேன். நீங்க என்னையே சந்தேகப்படுவீங்க போலிருக்கு. நடந்ததை அப்படியே சொல்லிடறேன்."

"சொல்லுங்க..."

"கம்பெனில பத்ரிநாத் தன் கணக்குக்கு மேலேயே பணம் வித்ட்ரா செய்திருந்தான். அப்படி இருக்கிறப்ப புதுசா ஒரு அம்பதாயிரத்துக்கு செக் போட்டு தன் கணக்கில பற்று எழுதிக்கிறதா சொன் னான். இப்படி கணக்குக்கு மேல அடிக்கடி எடுக்கறதால பிசினஸ் ரன்னிங் கேபிடல் குறைஞ்சி சிரமப்பட வேண்டியிருக்குன்னு பொறுமையா நான் எடுத்துச் சொன்னேன். அது அவனோட தன்மானத்தைத் தொட்டுடுச்சி. என்னைத் திட்டிட்டுப் போய்ட்டான். அப்புறமும் மனசு ஆறாம போன் செஞ்சி திட்டி, பார்ட்னர்ஷிப்லேர்ந்து விலகிக்கிறதா சொன்னான். அவன் சொன்னதை எல்லாம் பொறுமையா கேட்டுக்கிட்டேனேயொழிய நான் பதிலுக்கு எதுவும் பேசலை..."

"அம்பதாயிரத்துக்கு அவருக்கு என்ன தேவை?"

"அது வந்து... ஒரு பர்சனல் விவகாரம். என்னோட



வைஃபுக்குக் கூடத் தெரியாது. அதைக் கேக்காதீங்க. ப்ளீஸ்... தெய்வமா போயிட் டான். இனிமே அவன் வாழ்ந்த வாழ்க்கையைக் கிளற வேணாம்னு நினைக்கிறேன்."

"கிளறினாத்தான் உண்மையைக் கண்டுபிடிக்க முடியும். நீங்க எதுவா இருந்தாலும் சொல்லுங்க..."

"சார், அந்தப் பணம் சிவநேசன்னு ஒருத்தனுக்குக் கொடுக்கிறதுக்காக வித்ட்ரா செஞ்சான் பத்ரிநாத்."

"சிவநேசன் யாரு?"

"மாலினியோட அண்ணன். மாலினி எங்க ஆஃபீஸ்ல ஸ்டெனோவா இருக்கா. அழகா இருப்பா. கவர்ச்சியா இருப்பா. இன்னும் கல்யாணமாகலை. அவ பேர்ல ஸ்ரீபெரும்புதூர்ல ஒரு லேண்ட் வாங்கறதுக்கு அட்வான்ஸ் தொகையாத்தான் அந்தப் பணத்தைக் கொடுத்தான்."

"கடனாகத்தானே?"

"இல்லை சார். இலவசமா. லேண்டுக்கான மொத்தப் பணத்தையும் பத்ரிநாத் கொடுக்கறதா இருந்தான்."

"அப்படின்னா?"

"அதேதான். வெளிப்படையா சொல்லிடறேனே... மாலினியை பத்ரிநாத் சின்ன வீடா வெச்சிருந்தான். அவளோட அண்ணனோட முழு சம்மதத்தோட. இந்த விஷயம் அவன் வைஃபுக்குத் தெரியாது. நெருக்கமான ஃப்ரண்டுங்கிறதால என்கிட்ட எல்லாத்தையும் சொல்ற மாதிரி இதையும் சொல்லிட்டான். மாலினி வீட்டுக்கு எப்போ போனான், என்ன பேசினான்னு எதையும் மறைக்காம சொல்வான்..."

"ஐ ஸீ... அந்தப் பொண்ணு மாலினிக்கும், பத்ரிநாத்துக்கும் சமீபத்துல ஏதாச்சும் மனவருத்தம் உண்டா?"

"உண்டு சார். ஒரு நாள் வீட்ல வைஃப்கூட சண்டையாகி மூடு அப்செட் ஆனதால நடுராத்திரி காரெடுத்துக்கிட்டு மாலினி வீட்டுக்குப் போயிருக்கான். போனப்ப கொஞ்சம் போதை வேற. அதனால மாலினி கிட்ட வைஃபோட தகராறுன்னு புலம்பிருக்கான். அவ இதுதான் சாக்குன்னு பிடிக்காத பொண்டாட்டியோட எதுக்காக சேர்ந்து வாழணும்? பேசாம டைவர்ஸ் பண்ணிட்டு என்னைக் கல்யாணம் செய்துக்கங்களேன்னு தூபம் போட்டிருக்கா. உடனே இவனுக்குக் கோபம் வந்துடுச்சாம். எல்லை மீறிப் பேசாதேன்னு சத்தம் போட்டுட்டு கோபமா புறப்பட்டு வீட்டுக்குப் போயிட்டானாம். என்கிட்ட சொல்லிப் புலம்பினான். இந்த மாலினியோட எதுக்காக தொடர்பு வெச்சுக்கிட்டோம்னு நினைச்சி நொந்து போறேன்னான்..."

"ஏன் அப்படி?"

"காசு, பணம் அவள் கேட்டும் தர்றேன், கேக்காமயும் தர்றேன். ஆனா அவளை ரெண்டாந்தாரமா கல்யாணம் பண்ணிக்கிட்டு அந்தஸ்து கொடுக்கச் சொல்லி சும்மா எப்பப் பார்த்தாலும் நச்சரிக்கிறா. எனக்கு அந்த மாதிரி கொஞ்சம்கூட

ஐடியாவே இல்லைன்னு சொன்னான்."

"தன் கணவருக்கு இப்படி ஒரு தொடர்பு இருக்குன்னு எழிலரசிக்கு கொஞ்சம் கூடத் தெரியாதுன்னு நினைக்க றீங்களா?"

"தெரியாதுன்னு அவன் சொன்னதுதான். ஒருவேளை தெரிஞ்சிருக்கலாம்."

"சரி. சம்பவம் நடந்த அந்த ராத்திரில நீங்க எங்கே இருந்தீங்க?"

"அன்னைக்குத்தான் அவன் போன்ல பார்ட்னர்ஷிப் லேர்ந்து விலகிக்கிறேன்னு கோபமாப் பேசினான். நான் ரொம்ப அப்செட் ஆகிட்டேன். எத்தனை வருஷ ஃப்ரெண்ட் ஷிப் எங்களோடது! ஒரு சின்ன விஷயத்தை நான் உரிமையோட சுட்டிக்காட்டி அவனோட பொறுப்பில்லாத் தனத்தை திருத்திக்கச் சொன்னதுக்கு இந்த அளவுக்கு கோபப்பட்டுட்டானேன்னு ரொம்ப நொந்து போயிட்டேன். நைட் சாப்டுட்டு பத்து மணிக்கு காரெடுத்துக்கிட்டு பீச் சுக்குப் போய் தனியா உக்காந்து மேற்கொண்டு என்ன செய்யலாம், எப்படி அவனை சமாதானப்படுத்தலாம்னு யோசிச்சிட்டே இருந்தேன். ராத்திரி ஒரு மணிக்கு மேலதான் புறப்பட்டு வீட்டுக்குப் போனேன்."

"நீங்க போனது எந்த பீச்?"

"சாந்தோம் பீச். லைட் ஹவுசுக்குப் பக்கத்திலேதான் உக்காந்திருந்தேன்."

"தனியாப் போயிருந்திங்களா?"

"ஆமாம்."

"தேங்க்யூ."

## 6. தயாளன் and மாலினி

"ஏம்மா, உங்க ஆபீஸ் முதலாளி பத்ரிநாத்தை யார் கொலை செய்திருக்கலாம்னு நீ சந்தேகப்படறே?"

"எனக்கு யூகம் பண்ணத் தெரியலையே சார்..."

"தனக்கு யார் எதிரின்னு உன்கிட்ட பத்ரிநாத் சொன்ன தில்லையா?"

"ஒரு முதலாளி தன்கிட்ட வேலை பார்க்கிற பொண்ணு கிட்ட இதெல்லாம் பேசுவாங்களா என்ன?"

"பேசுவாங்களே... அந்தப் பெண்ணோட வீட்டுக் கட் டில்ல அவ மடியில தலை வைச்சுப் படுத்துக்கிட்டிருக் கிறப்போ இதைவிட அந்தரங்கமான விஷயங்களை கூடப் பேசுவாங்களே..."

"சார்! என்ன சொல்றீங்க?"

"பத்ரிநாத்துக்கும் உனக்கும் ரகசியத் தொடர்பு உண் டுன்னு சொல்றேன். அதை என்னால நிரூபிக்க முடியும்னு சொல்றேன். உன் பேர்ல ஸ்ரீபெரும்புதூர்ல லேண்ட் வாங்கற



துக்காக உங்கண்ணன் கட்டின ரூபா அம்பதாயிரம் பத்ரிநாத் கொடுத்தது. மாசா மாசம் உன்னோட பேங்க் அக்கவுண்ட்ல பத்ரிநாத் பணம் கட்டியிருக்கிறது கட்டில் நிவாரண நிதிக்காகன்னு நிரூபிக்க முடியும். இதோ பாரும்மா, நீ எப்படி கல்யாணமான பத்ரிநாத்தோட தொடர்பு வெச்சுக்கலாம்னு சக்களத்தி சண்டை போடறதுக்கு நான் அவரோட பொண்டாட்டி இல்லை. நான் ஒரு போலீஸ் ஆபீசர். நான் இன்வெஸ்டிகேட் பண்றது அவரோட கொலையைப் பத்தி மட்டும்தான். அதனால உனக்குத் தெரிஞ்ச தகவல்களை மறைக்காமப் பேசறதுதான் உனக்கு நல்லது."

"ஒரு தடவை வீட்ல என்னை தன்னோட கார்ல டிராப் செஞ்சார். ஒரு மரியாதைக்காக காபி சாப்பிடக் கூப்பிட்டேன். திடீர்னு என்னைக் கட்டிப் பிடிச்சு கிட்டத்தட்ட கற்பழிப்பு மாதிரி... அது நடந்து போச்சு சார்..."

"நீ அவருக்கு ஆசை நாயகியா மாறின வரலாறு கேக்க வரலை நான். நேரா கேக்கறேன். உங்கண்ணன் சிவநேசன் இந்தக் கொலையைச் செய்தானா?"

"அய்யோ! அவர் ஏன் செய்யணும்?"

"கோபம்தான். கோபத்துக்குக் காரணம் பத்ரிநாத் உன்னை ரெண்டாந்தாரமா கல்யாணம் செய்துக்க சம்மதிக் காததுதான். குறிப்பா சம்பவம் நடந்ததுக்கு முதல் நாள் அவர் தன் மனைவியோட ஏற்பட்ட சண்டை பத்தி சொன்னப்ப நீ பிடிக்காத பொண்டாட்டியை டைவர்ஸ் பண்ணிட்டு என்னை ரெண்டாந்தாரமா கட்டிக்கங்களேன்னு சொன்னே. அதில கோபம் வந்த பத்ரிநாத் சத்தம் போட்டுட்டுப் போய்ட்டார். உன்னை அலட்சியப்படுத்திட்டாரேன்னு உனக்கும் கோபம். உங்கண்ணனுக்கும் கோபம். அதனால திட்டம் போட்டு சம்பவத்தன்னைக்கு யாரோ பேசற மாதிரி போன்ல பத்ரிநாத் கிட்டப் பேசி வரவழைச்சி கொலை செஞ்சி, சந்தேகம் திசை திரும்பறதுக்காக ஹிந்தி டீச்சர் வீட்டுக் கிணத்துல போட்டுட்டு வந்துட்டீங்கன்னு நான் ஏன் சந்தேகப்படக் கூடாது?"

"இது அபாண்டம். அன்னைக்கு நானும் சரி, அண்ணனும் சரி, வீட்டை விட்டு வெளியேவே போகலை. தினம் ராத்திரி சாப்பாட்டுக்கப்புறம் ஒரு கேம் செஸ் விளையாடுவோம். அன்னைக்கும் பத்து மணிக்கு விளையாட ஆரம்பிச்சு கேமை பதினொன்றரை வரைக்கும் விளையாடி முடிச்சுட்டு படுக்கப் போய்ட்டோம். மறுநாள் காலையில கொலை தகவல் தெரிஞ்சி அதிர்ச்சியாயிடுச்சு. தாலி கட்டின பொண் டாட்டி வாய்விட்டு ஊரறிய ஒப்பாரி வைக்கலாம். என் துக்கத்தை அந்த மாதிரி வெளிப்படுத்திக்க முடியுமா சார்? சொத்து பூரா சட்டப் படி அவளுக்குப் போகப் போவுது. சட்டரீதியா உரிமை இல்லாம நான் எதையாச்சும் அதில எதிர்பார்க்க முடியுமா? ரகசியமாவாவது வெளியூர்ல ஒரு

ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்ல கட்டாயப்படுத்தி கல்யாணம் பண்ணியிருக்கலாம்னு இப்ப நினைக்கிறேன்."

"ஆக உங்க நோக்கம் சொத்து மேலதான். மனுஷன் செத்துப் போய்ட்ட துக்கம் ரெண்டாம்பட்சம்தான். இல்லையா?"

"எனக்கும் அவர் ஊரறிய தாலி கட்டி சமூக அந்தஸ்து கொடுத்திருந்தா எனக்கும் துக்கம்தான் முதல்பட்சமா இருக்கும் சார். இப்பவும் துக்கம் இருக்கு. அதை மீறி ஏமாந்துட்டமேங்கிற வெறுப்பும் இருக்கு. பத்தாததுக்கு நீங்க வேற வந்துட்டிங்க கொலைப்பழி போடறதுக்கு. சார், ஒண்ணு தெரிஞ்சுக்கங்க. பத்ரிநாத்துக்கு என்னைக் கல்யாணம் பண்ற நோக்கம் இல்லை. ஆனா அவர் பொண்டாட்டிக்கு வாங்கிக் கொடுத்ததை விட அதிகமா எனக்கு வாங்கிக் கொடுத்திருக்கார். போரடிக்குதுன்னுதான் சொன்னேன். டி.வி.யும்., டி.வி.டி. பிளேயரும் வந்திச்சு. கல்யாணத்துக்குப் போட்டுட்டுப் போறதுக்கு அந்தஸ்தா நகைகள் இல்லைன்னு சொன்னேன். இருபது பவுன்ல நகை செட் வந்திச்சு. வாடகை வீட்லயே இருக்கணுமான்னு கேட்டேன். லேண்ட் வாங்கறதுக்கு சம்மதம் வந்திச்சு. இப்படி எது கேட்டாலும் கிடைச்சது சார்- அந்தஸ்தைத் தவிர. பொன் முட்டை போடற வாத்து சார்! அதை யாராச்சும் அறுத்துப் பார்ப்பாங்களா?"

"சரி, என் சந்தேகத்தைத் தள்ளி வெச்சிடலாம். உங்க சந்தேகம் யார் மேல?"

"என் சந்தேகம் அந்த ஆடிட்டர் மணிசங்கர் மேலதான் சார். அண்ணனுக்குப் பழக்கம்தான் அவரு. அவரு பார்வையே சரியில்லை. எப்படியோ எழிலரசியை மயக்கிப் போட்டுட்டு குடும்பத்தில கலகம் ஏற்படுத்திட்டாரு. நீங்க வேணா பாருங்க. கொஞ்ச நாள் இடைவெளி கொடுத்துட்டு, எழிலரசி அந்தாளைக் கல்யாணம் செய்துக்குவா..."

### 7. தயாளன் and கோபாலன்

"எங்கப்பா வக்கீலு?"

"ஒரு கிளையண்ட் வந்திருந்தாரு சார். ஒரு பத்து நிமிஷத்துல வந்துடறதா சொல்லி அவரோட போனாரு சார். இப்ப வந்துடுவாரு..."

"உங்க பேரென்ன?"

"கோபாலன் சார்..."

"நான் என்ன விஷயமா விசாரிக்கிறதுக்காக வந்திருக்கேன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தொழிலதிபர் பத்ரிநாத் கொலை மேட்டர் தானே சார்? எங்க வக்கீல் வீட்டுக் கிணத்துல பாடி கிடந்ததால அவரை நீங்க சந்தேகப் படறதா சொல்லிட்டிருந்தார்..."

"ஒரு போலீஸ்காரன் எல்லாரையும் சந்தேகப்பட்டுத்



தானே ஆகணும்?"

"சரிதான் சார். ஒரு நிமிஷத்துல கொன்னுட்டுப் போயிடறானுங்க. அந்த கேசை முடிக்கிறது ஒரு பெரிய தலைவலி தான் உங்களுக்கு. அதுலயும் இது ஒரு விவகாரமான கேசு. இல்லையா சார்?"

"ஆமாம். கோபாலன், உங்க வக்கீலாச்சேன்னு பார்க்காம நான் கேக்கற கேள்விகளுக்கு சின்சியரா பதில் சொல்றீங்களா?"

"கேளுங்க சார். என் நாக்குலேர்ந்து சுட்டுப் போட்டாலும் பொய் வராது சார்."

"நேரடியா கேக்கறேன். உங்க வக்கீல் தன் மனைவி பார்கவி மேல சந்தேகப்பட்டார் இல்லையா?"

"இது ஒரு தர்மசங்கடமான கேள்வி சார்."

"பொய் வராதுன்னு சொல்லியிருக்கீங்க..."

"நாளைக்கு கோர்ட்டுக்கு கூப்பிடுவீங்களா?"

"அவசியப்பட்டா தான்."

"அவருக்கு மாமி மேல லேசா ஒரு சந்தேகம் உண்டு சார்."

"எப்படி சொல்றீங்க?"

"ஒரு யூகம்தான். ஒரு தடவை ஒரு கிளையண்ட் வந்திருந்தான். அவன் முதல்நாள் அவரைப் பார்க்க வீட்டுக்குப் போயிருந்ததாகவும், பெல் அடிச்சா மாமி கதவைத் திறந்ததாகவும், டிப்டாப்பா சூட் கோட் போட்டவர் ஒருத்தர் சோபாவுல உக்காந்து ஒரு புக் படிச்சிட்டிருந்த தாகவும் சொன்னார். அதுக்கு வக்கீல் அவரு பத்ரிநாத், இதே தெருவுல இருக்கற பெரிய புள்ளி, ஹிந்தி டியூஷன் எடுத்துக்கறார்னு விபரம் சொன்னார். வந்தவன் ஒரு புளியை கரைச்சி விட்டுட்டுப் போய்ட்டான்."

"எப்படி?"

"எல்லாம் சரி சார். என்னத்துக்காக வாசக் கதவை தாழ்ப்பாள் போட்டுட்டு டியூஷன் எடுக்கணும்னு கேட்டான். ஒரு அணுகுண்டு விழுந்த மாதிரி ஆயிடுச்சி வக்கீலுக்கு. ஒரு செகண்ட் கூட யோசிக்காம ஒரு சமாளிப்பு செஞ்சார். நான் தான் டியூஷன் எடுக்கறப்பல்லாம் கதவை தாழ் போட்டுக்கணும்னு வீட்ல ஒரு உத்தரவு போட்ருக்கறதா சொன்னார். வந்தவன் சமாதானமாய்ட்டான். ஆனா அது ஒரு சமாளிப்புன்னு எனக்கு நல்லாவே புரிஞ்சது. வக்கீல் மனசுல ஒரு குழப்பம் உக்காந்துடுச்சுன்னு ஒரு சின்னப் பார்வையிலேயே என்னால புரிஞ்சுக்க முடிஞ்சது."

"அப்புறம்?"

"மறுநாள் மத்தியானம் வீட்ல என்ன நடக்குதுன்னு தெரிஞ்சுக்கணும்னு அவருக்குள்ளே ஒரு குடைச்சல். ஒரு யோசனை செஞ்சார். என்னைக் கூப்பிட்டு ஒரு வேலை சொன்னார். வீட்டுக்குப் போய் ஒரு சீட்டுக்குப் பணம் கட்ட பணம் வாங்கிட்டு வரச் சொன்னார். அது அவசரப்படத்

தேவையில்லாத ஒரு சீட்டு. ஒரு உளவாளி மாதிரி என்னைப் பயன்படுத்தறதுக்காக என்னை அனுப்பிச்சார். நான் போனேன். பணம் வாங்கிட்டு வந்தேன். விட வேண்டியது தானே! போனப்போ கதவு தாழ் போட்டிருந்துச்சான்னு ஒரு கேள்வி கேட்டார். அப்புறம் கதவைத் திறந்தது யாருன்னு ஒரு கேள்வி. பத்ரிநாத் என்ன பண்ணிட்டிருந்தார்னு ஒரு கேள்வி. இப்படி என்னைக் குடைஞ்சி ஒரு பிட் விவரம் பாக்கி இல்லாம தெரிஞ்சுக்கிட்டார். எனக்கு ஒரு சந்தேகமும் இல்லாமல் புரிஞ்சது அவரு மாமியை சந்தேகப்பட ஆரம்பிச்சுட்டாருன்னு. ஆனா நான் எப்படி அவருக்கு ஆறுதலோ இல்லை ஒரு அட்வைசோ சொல்ல முடியும்?"

"சம்பவம் நடந்த அன்னைக்கு முதல்நாள் திண்டிவனம் போயிருந்ததா ஒரு விபரமான லிஸ்ட் கொடுத்திருந்தார். அதை திண்டி வனம் போலீசுக்கு அனுப்பி செக் செஞ்சோம். காலையில பனிரெண்டு மணிக்கு அங்கே ஒரு வக்கீலை சந்திச்சதை மட்டும் வெரிஃபை பண்ணியிருக்காங்க. மத்த தகவல்களுக்கெல்லாம் நிருபணம் எதுவும் இல்லை. அது சம்பந்தமா மறுபடி விசாரிக்கத்தான் வந்தேன். நீங்க ஒரு புது தகவல் கொடுத்தீங்க. வக்கீல் வந்ததும் உடனே எனக்கு போன் பண்ணச் சொல்லுங்க கோபாலன்."

"சரி சார்..."

## 8. தயாளன் and சிவநேசன்

"சார், நீங்க எத்தனை தடவை திருப்பித் திருப்பிக் கேட்டாலும் என் பதில் இதுதான். என் தங்கச்சியை பத்ரிநாத் முறையா கல்யாணம் பண்ணிக்கணும்னு நான் ஆசைப் பட்டேன். ஆனா அதுக்காக அவரை ரொம்பவும் வற்புறுத்தாதேன்னு மாலினி கிட்ட சொல்வேன். ஃபேமிலில உள்ள ஒருத்தர் வீட்ல கன்வின்ஸ் பண்ணி ரெண்டாந்தாரமா கல்யாணம் செய்துக்கிறது சின்ன விஷயமில்லை. அதுக்கு ரொம்ப நாளாகும். தண்ணில விழுந்து, மொதக்கிற கட்டையைப் பிடிச்சுக்கிட்டாச்சு. இப்போ நாம இஷ்டப்பட்ட திசைல போக முடியுமா? அலை எடுத்துட்டுப் போற திசையில தானே போக முடியும்? ஆனா மாலினிக்குப் பொறுமை பத்தாது. அடிக்கடி பத்ரிநாத்தைத் தூண்டி விட்டுடுவா. அது மாதிரி அன்னைக்கு ஏதோ சொல்லப் போயி, கோவிச்சுக்கிட்டுப் போய்ட்டார். அப்ப நான் மாலினியைத் தான் சத்தம் போட்டேன். பொண்டாட்டியோட சண்டை போட்டு நிம்மதியில்லாமத்தானே இங்க வந்தாரு. இங்கயும் அவரு நிம்மதியைக் குலைச்சி சண்டை போட்டு அனுப்பி வெச்சது நியாயமான்னு கேட்டேன். தங்கமான மனுஷன் சார். முதல் நாள் ராத்திரி என் தங்கை கிட்ட கோவிச்சுக்கிட்டாலும் சொன்னபடி மறுநாள் அவரோட



ஆபீசுக்குப் போனப்போ என் கிட்ட எந்த எரிச்சலும் காட்டாம ஐம்பதாயிரம் ரூபாய்க்கு செக் கொடுத்தாரு. என் தங்கச்சி பேசத் தெரியாம பேசிட்டா. அவளை மன்னிச்சிடுங்கன்னு நான் சொன்னப்போ பெருந்தன்மையோட 'அவ கேட்டதில தப்பில்லை. இப்ப என் மனசில கோபமில்லை'ன்னு சொன்னாரு சார். அவரால நிறைய லாபம் அடைஞ்சிட்டிருக்கிற நாங்க எதுக்காக சார் அவரை கொலை செய்யப் போறோம்?"

"எல்லாம் சரி. கொலை சம்பவம் நடந்தப்போ நீங்க எங்கே இருந்தீங்க சிவநேசன்?"

"வீட்லதான் சார் இருந்தேன். தங்கச்சியோட செஸ் விளையாடிட்டு படுக்கப் போனப்போ பனிரெண்டு மணி இருக்கும்னு நினைக் கிறேன்."



சிகரெட் பிடித்தபடி சிந்தனையில் இருந்தார் தயாளன்.

பையன் கொண்டு வந்த டீயை வாங்கி அவர் அருகில் வைத்த ஏட்டு சின்னசாமி, "எஸ்.பி. ரொம்ப சத்தம் போட்டாரா சார்" என்றான்.

"கொலை நடந்து மூணு நாளாச்சு. இன்னும் ஏன் யாரையும் அரெஸ்ட் பண்ணலைன்னு கத்தறார். யாரை யாச்சும் அரெஸ்ட் பண்ணியே தீரணும்னு போயி எவனோ சம்பந்தப் படாதவனைக் கூட்டிட்டு வந்து உள்ளே தள்ள முடியுமா? கோர்ட்ல வழக்கு தாக்கல் பண்ண வேணாமா? அங்கே ஒருத்தர் இருக்காரே ஜட்ஜுன்னு! அவர் கேக்க மாட்டாரா என்னப்பா ஆதாரம், யாருப்பா சாட்சின்னு. அவருக்கு பப்ளிக் பிராசிக்யூட்டர் நெத்தில அடிச்ச மாதிரி பதில் சொல்ல வேணாமா? எஸ்.பி. அவசரமா அரெஸ்ட் பண்ணச் சொன்னாருன்னு பண்ணிட்டேங்க, இனிமேதான் ஆதாரம் எதுவும் இருக்கான்னு பார்க்கணும்னு சொன்னா கோர்ட்டே சிரிக்காதா?" என்றார் கோபமாக தயாளன்.

"வாஸ்தவம்தான் சார். இந்த கேஸ் ரொம்பத்தான் சுத்தல்ல விட்ருச்சி நம்மை..."

"சுத்தல்னா சாதாரண சுத்தல் இல்லை. யாரை விசாரிச்சாலும் அவன்தான் குற்றவாளி மாதிரி இருக்கு. ஆனா அவன் இல்லையோன்னும் தோணுது. எல்லாரையும் சந்தேகப்படச் சொல்லுது. ஆனா யார் மேலேயும் அரெஸ்ட் வாரண்ட் வாங்கறதுக்கு தோதா எந்த ஒரு சின்ன ஆதாரமும் இல்லை. ஒரே ஒரு சாட்சி நமக்குக் கிடைச்சிருந்தா எந்தப் பிரச்சினையும் இல்லை. போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் மரண நேரத்தை மட்டும்தான் உருப்படியா சொல்லியிருக்கு. வேற உருப்படியான தகவல் எதுவும் அதிலேர்ந்து நமக்குக் கிடைக்கலை. கொலைக்குப் பயன்படுத் கைரேகைகள் எதுவும் இல்லை.

தின கயிறும் இல்லை, எந்தவிதமான க்ளூவும் இல்லை. சின்னசாமி, இப்ப நீ இதில நாம விசாரிச்சவங்க ஒவ்வொருத்தர் பேரையும் சொல்லு. நான் அனலைஸ் பண்ணி வெச்சிருக்கிறதைச் சொல்றேன்." என்றார் தயாளன்.

"முதல்ல அந்த வக்கீல் சார். அவர் வீட்டுக் கிணத்திலதான் பாடி இருந்திச்சு..."

"வக்கீல் இந்தக் கொலையை செய்திருக்கலாம். காரணம் அவர் தன் மனைவியை சந்தேகப்பட்டது உண்மை. வக்கீல் குமாஸ்தாவை விட்டு வேவு பார்த்திருக்கார். வீட்ல வைஃப் கிட்டயும் கோபம் காட்டியிருக்கார். திண்டிவனத்தில் மத்தியானம் அவர் இருந்த வரைக்கும்தான் உறுதி செய்ய முடிஞ்சிருக்கு. அதனால பதினோரு மணி சுமாருக்கு மெட்ராஸ் வந்து சேர்ந்த வக்கீல் பத்ரிநாத்துக்கு போன் செஞ்சி வேற குரல்ல பேசி ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வரச் சொல்லியிருக்கலாம். அந்த இடத்துக்கு வந்த பத்ரிநாத்தை கொலை செஞ்சி தன் வீட்டுக் கிணத்துலயே போட்டுட்டு காரைக் கொண்டு போய் பீச்சுல நிறுத்திட்டு எங்கயாவது சுத்திட்டு திரிஞ்சிட்டு விடிகாலையில் வீடு வந்து சேர்ந்துட்டு, கிணத்துல பிணத்தை புதுசா பார்க்கற மாதிரி பார்த்து அதிர்ச்சி அடையறதா ஆக்ட் கொடுத்து பக்கத்து வீட்டு ஜனங்களைக் கூட்டி, நமக்கு போன் செஞ்சி நாடகத்தைத் தொடர்ந்திருக்கலாம். ஆனா இதை எல்லாம் எப்படி நிரூபிக்கிறது? சாட்சியம் இல்லை. தடயமும் இல்லை. வெறும் சந்தேகம் மட்டும்தான் இருக்கு. இவர் கொலையை செய்திருக்க மாட்டாரோன்னு நினைக்க ஒரு பாயிண்ட்டும் இருக்கு. கொலையை பண்ணி பாடியை கார்லயே விட்டுட்டுப் போயிட வேண்டியதுதானே? தன் வீட்டுக் கிணத்துலேயே போட்டு சிக்கல் பண்ணி பெரிய ரிஸ்க் எடுப்பானா ஒருத்தன்?"

"அவர் வக்கீல் சார், அந்த மூளை ரிஸ்க் எடுக்கும்."

"ரைட்டு. அடுத்த நபர்?"

"பத்ரிநாத்தோட மனைவி எழிலரசி."

"எழிலரசி இந்தக் கொலையை செய்திருக்க வாய்ப்பிருக்கு. காரணம் அவளுக்கு சமீபகாலமா புருஷன் மேல வெறுப்பு உண்டு. குறிப்பா வியாபாரம் ஆரம்பிக்க சம்மதம் தெரிவிக்கலைன்னு ஒரு பெரிய கோபமே உண்டு. அதை மீறி பத்ரிநாத் தன் ஆபீஸ் ஸ்டெனோ மாலினியை சின்ன வீடா வெச்சிருந்த விஷயம் எப்படியாவது தெரிய வந்திருக்கலாம். அப்போ அந்த துரோகம் ஏற்படுத்தின கோபம் வேற சேர்ந்துக்கும். மணிசங்கரும் அவளும் நீ, வா, போன்னு உரிமையோட பேசற நண்பர்கள். தன் கணவன் வார்த்தையையும் மீறி அவனோட சேர்ந்து பிசினஸ் துவங்க ஆர்வம் காட்டினா எழிலரசி. அதுக்கு அடிப்படையா நட்பையும் மீறி வேற ஒரு ஈர்ப்பு மணிசங்கர் கிட்ட அவளுக்கு இருக்கலாம். மணிசங்கரும் கல்யாணமாகாத, அழகான, புத்திசாலியான இளைஞன். இவளும் அழகி. அவங்களுக்குள்ளே ஒரு ரகசிய அண்டர்ஸ்டாண்டிங் இருக்கலாம். சம்பவம் நடந்த அன்னைக்கு ராத்திரி மணிசங்கர், எழிலரசி வீட்டுக்கு வந்திருக்கிறது உறுதியாகியிருக்கு. ரெண்டு பேரும் சேர்ந்து பத்ரிநாத் கிட்ட ஒரு தடவை வியாபாரத்துக்கு சம்மதம் கேட்டிருக்கலாம். அப்பவும் அவன் மறுத்திருக்கலாம். அதனால ஆத்திரமாகி கொலை செய்துட்டு பாடியை என்ன செய்யறதுன்னு யோசிச்சிருக்கலாம். 'ஹிந்தி டீச்சர் புருஷன் வக்கீல் மேல பழி விழட்டும். அவங்க வீட்டுக் கிணத்துல போட்டுடு'ன்னு மணிசங்கருக்கு எழிலரசி ஐடியா கொடுத்திருக்கலாம். அதன்படி செய்தப்புறம் காரைக் கொண்டு போய் பீச்சுல நிறுத்திட்டு, நாம விசாரிச்சப்போ ராத்திரி பதினொன்றரை மணிக்கு ஒரு போன் வந்து புறப்பட்டுப் போனார்னு அழகா பொய் சொல்லியிருக்கலாம். இதெல்லாமும் கூட யூகம்தான். ஆதாரம் இல்லை. நெக்ஸ்ட்?"

"பார்ட்னர் சுவாமி" என்றார் ஏட்டு.

"அஃப்கோர்ஸ், அவருக்கும் கொலை செய்யத் தேவையான ஆத்திரம் இருக்கு. இவன் தன்னோட சின்ன வீட்டுக்குக் கொடுக்கறதுக்காக கம்பெனி பணத்தில அதிகமா வித்ட்ரா செய்வான். ஆனா அதை நான் கேக்கக் கூடாதான்னு ஒரு வெறி வரும் யாருக்கும். அதுக்காக பார்ட்னர்ஷிப்லேர்ந்து விலகிக்கறதா சொல்லி சத்தம் போட்டதும் அந்த வெறி இன்னும் அதிகரிச்சிருக்கலாம். கடற்கரைக்கு அவனை வரச் சொல்லி குரல் மாத்திப் பேசி வரவழைச்சு கொலை பண்ணிட்டு ஹிந்தி டீச்சர் வீட்ல பிணத்தைப் போட்டுட்டு காரை கடற்கரையில நிறுத்திட்டுப் போயிருக்கலாம். நம்ம கிட்ட லைட் ஹவுஸ் பக்கத்தில ஒரு மணி வரைக்கும் உக்காந்திருந்தேன்னு சொன்னதை அவனால எப்படி நிரூபிக்க முடியாதோ அதே மாதிரி அவன்தான் கொன்னான்னு நம்மாலும் உறுதியா நிரூபிக்க முடியாத சூழ்நிலை."

"இவன் விஷயத்தில இன்னொரு கேள்வி இருக்கு சார்."

"என்ன?"

"எதுக்காக பாடியை இவன் வக்கீல் வீட்டுக் கிணத்துல போடணும்?"

"பத்ரிநாத் சுவாமி கிட்ட எதையும் மறைச்சதில்லை. மாலினி வீட்டுக்குத் தான் எப்போ போனேன், என்ன பேசினேன்னு எல்லாம் சொல்றவன், தான் ஹிந்தி டீச்சர் கிட்ட பாடம் படிக்கிறதைப் பத்தியும் சொல்லியிருப்பான். வக்கீல் சந்தேகப்படற மாதிரி ஒரு உறவு இருந்ததோ என்னவோ... ஏன்னா பத்ரிநாத் ராமன் இல்லை. அழகான வைஃப் இருக்கிறப்ப சின்ன வீடு வெச்சிட்டிருந்தவன். அதனால பழி வக்கீல் மேல விழட்டும்னு சுவாமி யோசிச்சிருப்பான். அடுத்து?"

"மாலினியும், சிவநேசனும்"

"இவங்க ரெண்டு பேருக்கும் பத்ரிநாத் மேல ஒரே ஒரு வருத்தம்தான். மாலினியை அவன் ரெண்டாந்தாரமா கல்யாணம் செய்துக்கிட்டு ஒரு சமூக அந்தஸ்து தர்றதுக்கு அவன் தயாரா இல்லைங்கிற வருத்தம்தான் அது. மற்றபடி அவங்களுக்கு நிறையவே கொடுத்திருக்கான் பத்ரிநாத். அதனால கொல்லாம விட்டா மேல மேல லாபம்தான் கிடைக்கும். அப்படி இருக்கிறப்ப அவங்க கொலை செய்யத் தீர்மானிக்கிறது புத்திசாலித்தனமில்லை. ஆனா... கம்பெனி முதலாளியை மயக்கி கைக்குள்ளே போட்டுக் கிட்டு லாபம் சம்பாதிக்கிறதுதான் மாலினிக்கும் சிவநேசனுக்கும் வழக்கமான தொழில்னு வச்சுப் பார்த்தா, 'இந்த பார்ட்டி கிட்ட நிறையவே கறந்தாச்சு. மாடும் வத்திப் போச்சு. வேற மாடு பார்க்கலாம்'னு முடிவு செஞ்சி இந்தக் கொலையை மேற் கொண்டிருக்கலாம். சம்பவம் நடந்தன்னைக்கு வீட்ல செஸ் விளையாடிட்டு இருந்ததா அண்ணனுக்கு தங்கை சாட்சி சொல்வா. தங்கைக்கு அண்ணன் சாட்சி சொல்வான். இவங்க ரெண்டு பேரும் விளையாடிட்டிருந்தாங்கன்னு வேற ஒரு நபர் சாட்சி சொன்னாதான் அதை நம்ப முடியும். ஸோ, இவர்களும் கொலையை செய்திருக்க சான்ஸ் இருக்கு. வழக்கம் போல நிரூபிக்க நம்ம கிட்டத்தான் எதுவும் இல்லை."

"உண்மைதான் சார். எல்லார் மேலயும் சந்தேகம் இருக்கு. எல்லார் மேலயும் சந்தேகப்படாம இருக்கவும் முடியாது. தேவைப்படறதெல்லாம் ஒரே ஒரு சாட்சி. இல்லைன்னா ஒரே ஒரு தடயம்."

"இன்னொரு விஷயமும் கவனிச்சேன். ஒவ்வொருத்தரும் இன்னொருத்தர் மேல பழியைப் பந்தாடினாங்க. ஹிந்தி டீச்சர், பத்ரிநாத்துக்கு அவர் பொண்டாட்டி மேல கோபம்னு சொன்னார்னு சொல்லி பூடகமா எழிலரசி மேல பழி போட்டாங்க. எழிலரசி அவர் போன்ல சுவாமி கிட்ட கோபமா பேசினார்னு சொல்லி சுவாமி மேல பழி போட்டாங்க. சுவாமி மாலினி மேட்டரைச் சொல்லி அவங்க பக்கம் திசைதிருப்பினான். மாலினி ஆடிட்டர் மணிசங்கர் சரியில்லைன்னு பழிபோட்டா. இப்படி பழிச் சக்கரம் சுத்திட்டே இருந்தது."

தயாளன் முடிந்துபோன சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் போட்டு விட்டு, "எனக்கு ஒரு சின்ன ஐடியா. ஒருவேளை ஒர்க்-அவுட் ஆகலாம்" என்றார்.

"என்ன?"

"உடனடியா நம்ம ஸ்டேஷன்ல எல்லா பத்திரிகைக்காரங்களையும் கூப்பிட்டு ஒரு பிரஸ்மீட் நடத்தறது. அதில இந்த மாதிரி பல பேரை விசாரிச்சிருக்கோம். பல பேரை சந்தேகப்படறோம். ஆனா யாரையும் குறிப்பிட்டு அரெஸ்ட் பண்ண முடியாம தவிக்கிறோம். ஒரே ஒரு சாட்சியோ இல்லை சின்ன அழுத்தமான ஆதாரமோ கிடைச்சுட்டா கொலைகாரனைப் பிடிச்சிடுவோம். அது சீக்கிரத்துல



கிடைச்சிடும்னு நம்பறோம்னு சொல்றது..."

"அப்படிச் சொன்னா?" என்றார் எட்டு புரியாமல்.

"சொல்லலாம். என்ன நடக்குதுன்னு பார்க்கலாம்" என்றார் தயாளன்.




மறுநாள். செய்தித்தாள்களில்...

'தொழிலதிபர் பத்ரிநாத்
கொலையில்...
கொலைகாரன் விரைவில்
பிடிபடுவான்!'

-என்ற தலைப்பில் தயாளன் நிருபர்களிடம் பேசிய விவரங்கள் யாவும் வெளிவந்திருந்தன.

அன்றிரவு. ஒன்பதரை மணி.

போனை எட்டு எடுத்துப் பேசி, "சார், பேர் சொல்லலை. உங்க கிட்டத்தான் பேசணுமாம்" என்று ரிசீவரை நீட்டினார்.

"ஹலோ, சப்-இன்ஸ்பெக்டர் தயாளன் பேசறேன்..."

"வணக்கம் சார். தயவுசெஞ்சி என் பேரைக் கேக்காதீங்க. இன்னைக்குக் காலையில பேப்பர்ல தொழிலதிபர் பத்ரிநாத் கொலை வழக்கு சம்பந்தமா ஒரு செய்தி படிச்சேன். ஒரு தடயமோ ஒரு சாட்சியோ இருந்தா கேசை முடிச்சிடலாம்னு நீங்க சொல்லியிருந்ததைப் படிச்சதிலேர்ந்து எனக்குள்ளே ஒரு உறுத்தல்! ஒரு குழப்பம்!" என்றது ஆண் குரல்.

"ஏன்?"

"சார், உங்களுக்கு உதவக் கூடிய ஒரு தகவலை நான் சொல்லாம இருக்கிறது கூட ஒரு குற்றமா?"

"ஒரு வகையில. ஏன், உங்ககிட்ட அப்படி எதுவும் தகவல் இருக்கா?" என்று கேட்டபடி எட்டுக்கு இந்த போன் செய்யும் நம்பரை அறிய முயற்சி செய்யச் சொல்லி தயாளன் ஜாடை காட்ட, அவர் வெளியே ஓடினார்.

"சார், ஒரு கோரிக்கை..."

"என்ன?"

"என்னை கோர்ட்டுக்குக் கூப்பிட மாட்டேன்னு ஒரு உத்தரவாதம் தரமுடிஞ்சா ஒரு தகவல் சொல்றேன். ஏதோ குற்ற உணர்ச்சியால தான் ஒரு பயத்தையும் மீறி உங்களுக்கு போன் பண்ணினேன்."

"என்ன பயம்?"

"இந்தக் கொலையைச் செஞ்ச ஒரு குற்றவாளியை கண்ணால பார்த்திருக்கேன் சார் நான். சாட்சி சொல்ற ஒரே காரணத்தால அவனை நீங்க பிடிச்சீங்கன்னா அவன் ஒரு ஆத்திரத்துல என்னை ஒரே குத்தா குத்தி கொலை செஞ்சா என்ன செய்வீங்க? இருக்கிறது ஒரு உயிர் சார். யாருக்கும் உள்ள ஒரு பயம்தானே? அதனாலதான் கேக்கறேன். நான்

யாருன்னு விபரம் கேக்காம நான் சொல்ற தகவலை கேட்டுக்கறதா இருந்தா சொல்றேன்..."

"ரைட் சார், நீங்க யார்னு சொல்ல வேணாம். சம்பவம் நடந்த அன்னைக்கு நீங்க என்ன பார்த்தீங்க?"

"சார், அன்னைக்கு தியேட்டர்ல ஒரு படம் பார்த்துட்டு, பாண்டி பஜார்ல ஒரு நடைபாதைக் கடையில சாப்பிட்டுட்டு, ஒரு சிகரெட் பிடிச்சிட்டு, ஒரு ஃப்ரெண்டோட பேசியனுப்பிட்டு ராஜம்மாள் தெருவுல நடந்தேன் சார்."

"சரி."

"அப்போ ஒரு கார் தூரத்துல வந்து நின்னது. அதிலேர்ந்து இறங்கினது பத்ரிநாத்! அவரை எனக்குத் தெரியும். பார்த்திருக்கேன். அந்த தெருவுலதான் வீடு. அந்தக் காரை நிறுத்தின இடத்தில ஒருத்தர் நின்னுட்டிருந்தாரு. ஒரு அஞ்சரையடி இருப்பார் அவர். ஒரு தெருவிளக்கு வெளிச்சம் அவர் மேல விழுந்தது. தலை லேசா நரைச்சிருந்தது. நெத்தில ஒரு திரிசூர்ணமிட்டிருந்தார். நான் பாத்ரூம் போறதுக்காக ஒரு ஓரமா உக்காந்தேன். தெருவுல என்னையும் அவங்களையும் தவிர வேற யாருமில்லே. யூரின் பாஸ் பண்ணிட்டே ஒரு பார்வை திரும்பிப் பார்த்தேன். எனக்கு பக்குன்னு ஒரு திகில் வந்திடுச்சு. அந்த திரிசூர்ணம் ஆசாமி ஏதோ ஒண்ணை பத்ரிநாத் கழுத்தில சுத்தி ஒரே இறுக்கா இறுக்கிட்டிருக்கான். எனக்கு ஒரே உதறல். என் கண் முன்னாடி ஒரு கொலை! என்ன செய்றதுன்னு தெரியலை. அதுக்குள்ளே பத்ரிநாத் தலை தொங்கிடுச்சு. அவரைத் தூக்கி தோள்ல போட்டுக்கிட்டு பக்கத்தில இருந்த ஒரு வீட்டு சந்துக்குள்ளே போனார் அந்த ஆசாமி. ரெண்டு நிமிஷத்தில அவர் மட்டும் திரும்பி வந்தார். அந்தக் கார்ல ஏறிப் புறப்பட்டு சர்ருன்னு போய்ட்டார். நான் வெலவெலத்துப் போய்ட்டேன். போலீசுக்கு ஒரு போன் போட்டுச் சொல்லலாமான்னு ஒரு யோசனை வந்திச்சு. அப்புறம் ஒரு பயம்! கோர்ட்ல போய் சொல்லணும். கொலைகாரனைப் பகைச்சுக்கணும். அவன் ஒரு வன்மம் வைப்பான். எதுக்கு வம்பு? யாராச்சும் சொல்லி எப்படியாச்சும் போலீஸ் பிடிச்சுக்கட்டும்னு சொல்லி நான் போய்ட்டேன். மறுநாள் தான் தெரிஞ்சது, பாடி கிடைச்ச அந்த வீடு வக்கீல் வீடுன்னு. அவரை நான் சந்திச்சதில்லை. மறுநாள் ஒரு ஆர்வத்தில அந்த வீட்டுப் பக்கம் ஒரு நடை வந்தேன். நீங்க வக்கீலை விசாரிச்சிட்டு இருந்தீங்க. வக்கீலைப் பார்த்துட்டு அசந்துட்டேன். முதல்நாள் நான் பார்த்தது அவரையேதான்! கொலையைத் தானே செய்துட்டு தன் வீட்டுக் கிணத்துலேயே போட்டு பிரச்சினைகளை சந்திக்கத் தயாரா இருக்கிறதுன்னா என்ன ஒரு துணிச்சல் இருக்கணும்?"

"சார், ரொம்ப தேங்க்ஸ். எங்களுக்கு வக்கீல் மேல முதல் சந்தேகம் வந்து அப்புறம் அது விலகட்டும்னு பிளான் பண்ணித்தான் கொலை செஞ்சி தன் வீட்டுக் கிணத்துலேயே போட்டிருக்கணும்னு நாங்களும் ஒரு யூகம் வெச்சிருந்தோம். ஆனா ஆதாரம் இல்லை. இதோ பாருங்க, நான் சொல்றதை முழுசா கேளுங்க. அவசரப்பட்டு போனை வெச்சிடாதீங்க. போலீஸ் திறமையா செயல்படணும்னா அதுக்கு பொதுமக்களோட ஒத்துழைப்பும் கண்டிப்பா தேவை. இப்போ உங்களுக்கு நல்லா தெரியும் அந்த வக்கீல்தான் கொலைகாரன். எங்களுக்கும் தெரியும். என்ன பிரயோஜனம்? அவரை அரெஸ்ட் செஞ்சி கோர்ட்ல ஆஜர்ப்படுத்தினாதானே தண்டனை வாங்கித்தர முடியும்? அப்பத்தானே நீதியும், சட்டமும் தலைநிமிர்ந்து நிற்கும்? இந்தக் கொலைக்கு ஒரே ஒரு சாட்சி நீங்கதான். உங்க ஒத்துழைப்பு இருந்தா நான் சாதிச்சுக் காட்டுவேன். உங்களுக்கு எந்தப் பயமும் வேணாம். உங்களுக்கு முழு அளவில பாதுகாப்பு நான் தர்றேன். சொல்லுங்க... யார் நீங்க? எங்க இருக்கீங்க? தயவுசெஞ்சி சொல்லுங்க..."

"தெரியும் சார், இப்படித்தான் நீங்க சொல்வீங்கன்னு ஒரு யூகம் இருந்திச்சு. அதனாலேயே ஒரு தயக்கம் வந்திச்சு. ஆனாலும் ஒரு உறுத்தல் தாங்காம பேசினேன். ஆனா எந்த வகையிலயும் நான் மாட்டிக்கிறதா இல்லை சார். எனக்கு பயம் இருக்கிறது நியாயம்தான். மன்னிச்சுடுங்க. வெச்சிடறேன்..."

"ஹலோ, ப்ளீஸ், வெச்சிடாதீங்க..." என்று தயாளன் சொல்லச் சொல்ல எதிர்முனை வைக்கப்பட்டது.

"ச்சே!" என்றார் தயாளன்.

"அந்தக் காலை ட்ரேஸ் பண்ண முடியலை சார்" என்று ஏட்டு வந்து சொன்னபோது மறுபடி "ச்சே!" என்றார்.

போனில் தெரிவிக்கப்பட்ட விபரங்களை எல்லாம் ஏட்டிடம் தயாளன் சொல்லி முடித்ததும் ஏட்டு, "ச்சே!" என்றார். "சார், அப்போ அந்த வக்கீலை உள்ளே கொண்டு வந்து போட்டு நாலு வெதும்பு வெதும்பினா ஒத்துக்க மாட்டானா?"

"அவரு வக்கீல், சட்டம் தெரிஞ்சவர், கஷ்டம்..." என்று சிந்தனையில் ஆழந்த தயாளன், சட்டென்று பிரகாசமாகி விரல்களில் சொடக்கு போட்டார்.

"என்ன சார்?"

"எனக்கு போன் செஞ்சி பேசினது யாருன்னு கண்டு பிடிச்சிட்டேன்" என்றார் உற்சாகமாக.




அந்த வீட்டின் கதவைத் தட்டிய தயாளன், திறந்த நடுத்தர வயதுப் பெண்ணிடம், "வக்கீல் வெங்கட்ராமன் கிட்ட குமாஸ்தாவா வேலை பார்க்கிற கோபாலன் வீடு இதானே?" என்றார்.

"ஆமாம். என் புள்ளைதான். கோபாலா!

யாரோ போலீஸ்காரங்க உன்னைத் தேடிட்டு வந்திருக்காங்க பாரு."

உள்ளேயிருந்து வந்த கோபாலன், "வாங்க சார்" என்று சொல்லி முடிக்கும் முன்பாக அவனை அறைந்தார். கையைப் பிடித்து முறுக்கினார். "ராஸ்கல்! கொஞ்சம் முன்னாடி என்கிட்ட போன்ல பேசினது நீதானே? சொல்டா..."

கையை முறுக்க, முறுக்க வலி தாங்காமல், "ஆமாம் சார், கையை விடுங்க, வலிக்குது..." என்று கத்தினான் கோபாலன்.

ஆனால் கையை விடுவிக்காமல், "சொல்லு. நீ சொன்னதெல்லாம் பொய். எது உண்மைன்னு நான் சொல்றேன். பத்ரிநாத்தை நீதான் கொலை செஞ்சி உன் வக்கீல் வீட்டுக் கிணத்துல போட்டே. சரியா? சொல்லு! ஏன் அப்படிச் செஞ்சே?"

"சார், சத்தியமா நான் கொலை செய்யலை. நான் செஞ்சது ரெண்டே ரெண்டு போன் தான். சம்பவம் நடந்த அன்னைக்கு பத்ரிநாத்துக்கு போன் செஞ்சி குரல் மாத்திப் பேசினேன். 'உங்க வைஃப் எழிலரசிக்கும் மணிசங்கருக்கும் ரகசியத் தொடர்பு இருக்குதுங்கிறதுக்கான ஆதாரம் என்கிட்ட இருக்கு. உடனே கார் எடுத்துக்கிட்டு வாங்க. தெருமுனையில நான் வெய்ட் பண்றேன். கார்ல போய்க்கிட்டே பேசலாம்'னு பேசினேன். என் வார்த்தையை நம்பி பத்ரிநாத் காரெடுத்துக்கிட்டு புறப்பட்டு வந்தார். என் கண் முன்னாடி அவர் கொலை செய்யப்பட்டார். நான் எதுவும் செய்ய முடியலை. காரணம் நான் கத்தி முனையில மிரட்டப்பட்டிருந்தேன். அதே மாதிரி கொஞ்சம் முன்னாடி பக்கத்தில இருக்கிற பப்ளிக் பூத்லேர்ந்து உங்க கிட்ட பேசினதும் மிரட்டல் முனையிலதான். சொல்லித் தந்தபடி பேசலைன்னா என் வயித்தில இறங்கிறதுக்கு கத்தி தயாரா இருந்தது" என்றான் கோபாலன்.

"பத்ரிநாத்தை கொலை செஞ்சது யாரு? உன்னை மிரட்டல் முனையில வக்கீல் மேல பழிபோடச் சொன்னது யாரு?"

"அவனைக் காட்டிக் கொடுத்தா என்னைக் கொன்னுடுவான் சார்..."

"நான் பார்த்துக்கறேன். இப்ப உண்மையைச் சொல்லலைன்னா நான் கொடுக்கிற உதையும் கிட்டத்தட்ட சாவுக்குப் பக்கத்திலதான் உன்னைக் கூட்டிக்கிட்டுப் போகும்."

"சொல்லிடறேன் சார். அவன் இப்போ பக்கத்தில இருக்கிற ஹோட்டல்ல ரூம் எடுத்துத் தங்கியிருக்கான். ரூம் நம்பர் 207."

அந்த ஹோட்டலில் ரூம் நம்பர் 207ல் போலீஸ் நுழைந்து அங்கிருந்தவனைக் கைது செய்து ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து 'உரிய' முறையில் விசாரித்ததும் அவன் எல்லாவற்றையும் தவணை முறையில் ஒப்புக் கொண்டான்.

"நான்தான் கோபாலனை மிரட்டி பத்ரிநாத்துக்கு போன் பண்ணி வரவழைக்கச் சொன்னேன். வந்ததும் பத்ரிநாத் கழுத்தில கயிறு சுத்தி இறுக்கி கொலை செஞ்சி வக்கீல் வீட்டு சந்து வழியா பின்பக்கம் கொண்டு போயி கிணத்துல போட்டுட்டு காரை கோபாலனை விட்டு ஓட்டி எடுத்துட்டு வந்து பீச்ல நிறுத்தினேன். எனக்கு டிரைவிங் தெரியாது. எனக்கு பத்ரிநாத் போன் நம்பரும் தெரியாது. என்னோட ஒரே நோக்கம் வக்கீல் ஒரு விவகாரத்தில மாட்டி ஜெயிலுக்குப் போகணும். வக்கீலுக்கு தன் பொண்டாட்டி பேர்லயும், பத்ரிநாத் பேர்லயும் சந்தேகம் உண்டுன்னு எனக்குத் தெரியும். அதனால பத்ரிநாத்தை கொலை செஞ்சி அவர் வீட்டு கிணத்துல போட்டா போலீஸ் அவரை சந்தேகப்பட்டு கைது செஞ்சி வழக்கு போடும்னு எதிர்பார்த்து அப்படிச் செஞ்சேன். ஆனா போலீஸ் விசாரிச்சுக்கிட்டே இருந்ததேயொழிய கைது செய்யலை. சாட்சியோ, ஆதாரமோ இல்லாததால எதுவும் செய்ய முடியலைன்னு போலீஸ் சொன்ன செய்தியை பேப்பர்ல படிச்சேன். அதனால கோபாலனை மறுபடி கத்தி முனையில மிரட்டி வக்கீல் கொலை செஞ்சதை கண்ணால பார்த்தேன்னு போன்ல பேசச் சொன்னேன். எல்லாம் நான்தான் செஞ்சேன். என் மிரட்டல் காரணமா கோபாலனை வெச்சி செயல்படுத்தினேன்."

"எதுக்கு? வக்கீல் ஜெயிலுக்குப் போகணும்னு உனக்கு என்ன ஆசை? ஏன் அவரைப் பழிவாங்கறதுக்குத் துடிச்சே?"

"அவர் என்னைப் பழி வாங்கிட்டார் சார். எனக்கும் என் அண்ணன் மருதுவுக்கும் ஒரு சொத்துத் தகராறு சார். ஏழரை ஏக்கர் நிலத்து மேல சண்டை. சொத்தோட மதிப்பு இருபத்தாறு லட்சம். அப்பா எழுதின உயில்படி, நியாயப்படி என்னைச் சேர வேண்டிய சொத்து. அண்ணன் உயில்ல தில்லுமுல்லு பண்ணிட்டதால விவகாரம் கோர்ட்டுக்கு வந்திச்சி. என்னோட வக்கீலா நான் வெங்கட்ராமனை நியமிச்சேன். நிச்சயமா ஜெயிச்சுடலாம்னு நம்பிக்கை கொடுத்து கேசை நடத்தினார்.

ஆனா கடைசில தீர்ப்பு அண்ணனுக்கு சாதகமாகி அத்தனை சொத்தும் அண்ணனுக்குப் போயிடுச்சு. அப்புறமாத்தான் தெரிஞ்சது எங்கண்ணன், வக்கீலை தனியாப் பார்த்து இந்தக் கேசில சரியா வாதாடாம விட்டா அஞ்சு லட்சம் தர்றதா பேரம் பேசிருக்காங்கன்னு. இந்த உண்மையை மனசாட்சி தாங்க முடியாம குமாஸ்தா கோபாலன் என்கிட்ட சொல்லிட்டார். உடனே நான் ஆத்திரமாகி கொதிச்சேன். வக்கீலை நேரா பழி வாங்கறதை விட அவர் மேல ஒரு கொலைப் பழி உருவாக்கி பேரை நாறடிச்சு ஜெயிலுக்கு அனுப்பணும்னு தோணிச்சு. அதனாலதான் இப்படி

செஞ்சேன்" என்றான் அவன்.

பெருமூச்சு விட்டார் தயாளன்.

"எனக்கு ஒரு சந்தேகம்" என்றார் ஏட்டு.

"என்ன?"

"போன்ல பேசினது கோபாலன்தான்னு எப்படி நீங்க கண்டுபிடிச்சீங்க சார்?"

"கோபாலன் குரலை மாத்திதான் பேசினார். ஆனா அவர் பேச்சுல ஒரு வினோதமான மேனரிசம்! அதாவது எதுக்கெடுத்தாலும் 'ஒரு'ன்னு ஒரு வார்த்தை சேர்த்துப் பேசறது. ஒரு பயம், ஒரு சந்தேகம், ஒரு கோரிக்கை, ஒரு குழப்பம்னு எல்லாத்துக்கும் 'ஒரு' போட்டுடுவாரு. வக்கீல் ஆபீஸ்ல விசாரிச்சப்பவும் அவர் அதே மாதிரி நிறைய 'ஒரு' போட்டுப் பேசினார். அந்த வித்தியாசம் எனக்குள்ளே பதிஞ்சி போச்சு. போன்ல பேசினப்பவும் அதே மாதிரி பேசினதால பிடிச்சிட்டேன்" என்றார் தயாளன்.

★

பின்குறிப்பு: கொலைகாரனுக்கு உங்களுக்குப் பிடித்தமான ஒரு பெயரை நீங்களே சூட்டிக் கொள்ளலாமே...

-பட்டுக்கோட்டை பிரபாகர்

